பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஆனி07 வியாழக்கிழமை 21.06.2018 | கதிர் 227

### இனி இது ரகசியம் அல்ல!

அலுவலகத்துக்கு வந்த அரசியல் பிரமுகர்கள் சிலருடன் நேற்று உரையாடிக் கொண்டிருந்தேன். அவர்களில் ஒருவர் சொன்ன விடயத்தை உங்களுடன் பகிர்வது பொருத்தமானது என்று நினைக்கின்றேன்.

பக்கம் 03

# 6 மாகாண சபைகளுக்கு டிசெம்பர் மாதம் தேர்தல்

## விருப்பு வாக்குகள் முறைமையில் நடக்கும்



கொழும்பு, ஜூன் 21

**வடக்கு, கிழக்கு உட்பட 6 மாகாண சபைகளுக்கு விருப்பு வாக்குகள் முறைமையில் (விகிதாசார) எதிர்வரும் டிசெம்பர் மாதம் தேர்தல் நடத்தப்படும் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனரத்ன நேற்று அறிவித்தார்.**

**அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றபோது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்ட அறிவிப்பை வெளியிட்டார்.**

பக்கம் 14

## ஞானசாரருக்கு மன்னிப்பு ஜனாதிபதி - பிரதமர் பேச்சு

கொழும்பு, ஜுன் 21

சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஞானசார தேரருக்குப் பொது மன்னிப்பு வழங்குவது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்துரையாடி வருகின்றனர் என அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறினார்.

அமைச்சரவை முடிவு

பக்கம் 14

## ஐ.நா. மனித உரிமைகள் சபையிலிருந்து
## அமெரிக்கா வெளியேறியமை இலங்கைக்குப் பெரு மகிழ்ச்சி

கொழும்பு, ஜுன் 21

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இருந்து அமெரிக்கா வெளியேறியமையால் இலங்கை மீதான சர்வதேசத்தின் அழுத்தம் குறையும் என்று சுகாதார அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்றுக் கொழும்பில் நடந்தது. இதில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு

பக்கம் 14

## காணாமற்போனோரின் உறவுகள் ஜெனீவாவுக்கு

ஜெனீவா, ஜுன் 21

தமிழர் தாயகத்திலிருந்து வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் பிரதிநிதிகள் குழு ஐ.நா மனித உரிமைகள் சபையின் 38ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்க ஜெனீவா சென்றடைந்

பக்கம் 03

## ஊரெழுப் பெண் கொழும்பில் கழுத்து அறுத்துப் படுகொலை!

கொழும்பு, ஜுன் 21

யாழ்ப்பாணம் ஊரெழுவைச் சேர்ந்த பெண் ஒருவர், கொழும்பு கொட்டாஞ்சேனையில் வீடொன்றில் வைத்துக் கழுத்து அறுத்துக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து சென்றவர்களே இந்தக் கொலையைச்

பக்கம் 14

## பிள்ளைகள் மீதாவது மனமிரங்கி ஆனந்தசுதாகரை விடுவியுங்கள்

**அரசிடம் அவரது தாயார் கோரிக்கை**




கிளிநொச்சி, ஜுன் 21

தாயாரும் உயிரிழந்த நிலையில், சுதாகரின் பிள்ளைகள் தற்போது பாதுகாப்பின்றி உள்ளனர். பிள்ளைகளுக்காகவேனும்

பக்கம் 14

## மண்டைதீவு - அல்லைப்பிட்டி தொடு பாலம் நேற்று திறப்பு



யாழ்ப்பாணம், ஜுன் 21

மண்டைதீவு – அல்லைப்பிட்டி இடையே புதிதாக அமைக்கப்பட்ட தொடுப்புப் பாலம் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர்

பக்கம் 03

## விக்கியே மீண்டும் முதலமைச்சராவார்

**கூறுகிறார் விந்தன்**

யாழ்ப்பாணம், ஜுன் 21

வடக்கு மாகாண சபையின் அடுத்த முதலமைச்சராக நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரனே மீண்டும் வருவாரெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனக

பக்கம் 14

## சரணடைந்து காணாமற்போனோரின் விவரங்களைக் கோருகிறது பணியகம்

கொழும்பு, ஜுன் 21

ஜஸ்மின் சூகா தலைமையிலான சர்வதேச உண்மை மற்றும் நீதி திட்டத்தால் வெளியிடப்பட்டுள்ள இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டோர் பட்டியலிலுள்ள நபர்கள் தொடர்பான தகவல்கள் இருக்குமாயின் அவற்றைத் தந்துதவுமாறு காணாமற்போனோர் அலுவலகம் கேட்டுள்ளது.

இறுதிப் போர் நிறைவடைந்த பின் இராணுவத்

பக்கம் 14

## காணாமற்போன பாடசாலையின் அத்திபாரம் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 21

பலாலி வடக்கில் காணாமற்போன பாடசாலையின் அத்திபாரத்தை அந்தப் பகுதி மக்கள்

பக்கம் 03

## வட மாகாணப் பட்டதாரிகள் கவனவீர்ப்புப் போராட்டம்



யாழ்ப்பாணம், ஜுன் 21

அனைத்துப் பட்டதாரிகளையும் பாதிக்காத வகையில் அரச நியமனம் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் நேற்று யாழ்ப்பாணம் மாவட்ட

பக்கம் 14

## இலங்கை மீதான நம்பிக்கை வீழ்ச்சி

கொழும்பு, ஜுன் 21

இலங்கை மீதான சர்வதேச நம்பிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது என்று வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வசந்த சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுச் செய்தியாளர்கள் எழுப்

பக்கம் 14

## 3 பிள்ளைகளுக்கும் நஞ்சு கொடுத்து தானும் அருந்தினார் வவுனியாத் தாய்

**நால்வரும் வைத்தியசாலையில் அனுமதி**

வவுனியா, ஜுன் 21

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் தாயும் மூன்று பிள்ளைகளும் நஞ்சருந்திய நிலையில் உறவினர்களால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

செட்டிகுளம், மெனிக்பாம் 3 பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வசிக்கும் குடும்பத்தில் கணவன் காலை வேலைக்குச் சென்றுவிட்டார். இதன் பின்னர் மனைவி தனது மூன்று பிள்ளைகளுக்கும் நஞ்சு மருந்தைச் சோடாவுடன் கலந்து வழங்கியதுடன் தானும் அதனை அருந்தியுள்ளார்.

பக்கம் 14

# தென்கொரிய உதவியுடன் 4 மீன்பிடித் துறைமுகங்கள்



மூன்று வடக்கில் அமையும்

தென்கொரியாவின் உதவியுடன் நான்கு பலநோக்கு மீன்பிடித் துறை முகங்கள் அமைக்கப்படவுள்ளன. இவற்றில் மூன்று வடக்கில் அமை க்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

சாலை, மாதகல், நெடுந்தீவு மற் றும் உடப்பு ஆகிய இடங்களிலுள்ள மீன்பிடித் துறைமுகங்களே தென் கொரிய உதவியுடன் பலநோக்கு மீன்பிடித் துறைமுகங்களாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இது தொடர்பாகத் தென்கொரிய மற்றும் இலங்கை அதிகாரிகளுக் கிடையில் நடத்தப்பட்ட உயர் மட்டக் கூட்டத்தில், அடுத்த சில மாதங்க ளில், முதலாவது பலநோக்கு மீன் பிடித் துறைமுகத்தின் கட்டுமானப் பணியை ஆரம்பிக்க முடிவு செய் யப்பட்டுள்ளது.

முதலாவது மீன்பிடித் துறை முகத்தை அமைக்கும் பணி, 2019 ஆம் ஆண்டு முதல் சில மாதங்க ளுக்குள் உடப்பு அல்லது நெடுந் தீவில் ஆரம்பிக்கப்படும் என்று தென்கொரிய அதிகாரிகள் தெரிவித் தனர்.

இந்தப் பலநோக்கு மீன்பிடித் துறைமுகங்கள், மீன்பிடி, வணிகம் மற்றும் சுற்றுலாத் துறைகளை அபிவிருத்தி செய்யும் வகையில் அமைக்கப்படவுள்ளன.

இதற்குத் தேவையான தொழில் நுட்ப, திட்டமிடல் மற்றும் கடன் உத விகளை வழங்கத் தென்கொரியா இணங்கியுள்ளது.

தென்கொரியாவே தனது செல வில் சாத்திய ஆய்வை மேற்கொள் ளும். இந்தப் பணி ஒக்ரோபர் மாதத் துக்குள் நிறைவடையும். (ஐ)

# வயல் காணிகள் வழங்கக் கோரி ஜெயபுரம் மக்கள் ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி, ஜூன் 21

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜெய புரம் கிராம மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

நேற்று முற்பகல் 10 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் பூநகரிப் பிரதேச செயலகம் முன்பாக இடம்பெற்றது.

தமக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிக்கமைய வயல்





காணிகளை வழங்குமாறு கோரியே மக்கள் போராட் டத்தில் ஈடுபட்டனர்.

1983ஆம் ஆண்டு அந்தப் பகுதியில் மக்களுக் குத்தலா ஒரு ஏக்கர் காணி வழங்குவதாகத் தெரிவித்த போதிலும் தற்போது அந்தக் காணிகளை வனவளப் பாதுகாப்புப் பிரிவினர் தமது பிரதேசமாகக் கூறி கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், அந்தக் காணிகளைத் தமக்குத் தரு மாறு கோரியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

பூநகரி வாடியடிச் சந்தியில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் பூநகரிப் பிரதேச செயலகம் வரை சென்று ஜனாதிபதிக்கான மகஜர் கையளிக்கப்பட்டது.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த பிரதேச மக்கள்,

1983ஆம் ஆண்டு சுமார் 48 பேருக்குக் காணி கள் வழங்கப்பட்டன. இதன்போது தலா ஒரு ஏக்கர் காணி நெற்செய்கைக் காணியாக வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் ஏற்பட்ட அசாதாரண சூழலில் பலர் இந்தியாவுக்குச் சென்றனர். எஞ்சியவர்களுக்கு அந்தக் காணி கிடைக்குமென நீண்ட காலமாக எதிர்பார்த்தோம். ஆனால் அது கிடைக்கவில்லை. தற்போது அந்தக் காணிகளை வனவளப் பாதுகாப்புப் பிரிவினர் தமது காணிகள் எனத் தெரிவித்து மரக் கன்றுகளை நாட்டி வருகின் றனர். எமக்கு அந்தக் காணிகளைத் தருமாறு தெரி வித்து பல்வேறு தரப்பினருக்கும் கடிதங்கள் வழங்கி னோம். ஆனால் இன்றுவரை எவ்வித தீர்வும் இல்லை. - என்றனர். (ஐ - 70)

## வவுனியாவில் இளைஞன் கிணற்றில் சடலமாக மீட்பு

வவுனியா, ஜூன் 21

வவுனியா, வேப்பங்குளம் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து இளை ஞர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப் பட்டது.

வவுனியா, வேப்பங்குளம், ஆறாம் ஒழுங்கையில் கிங்ஸ் விளையாட்டுக் கழகத்தின் மைதானத்துக்கு அருகி லுள்ள கிணற்றிலிருந்தே இந்தச் சட லம் மீட்கப்பட்டது.

கிணற்றில் இருந்து சடலமாக மீட் கப்பட்டவர் சத்தியசீலன் டிலக்சன் (வயது- 22) என உறவினர்களால் அடையாளம் காணப்பட்டது.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த வவுனியா பொலிஸார் கிணற்றிலிருந்து சடலத்தை மீட்டதுடன் இளைஞனின் பாதணிகள் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றையும் அருகில் இருந்து மீட் டுள்ளனர்.

இது குறித்து மேலதிக விசாரணை களை வவுனியா பெலிஸார் மேற்கொண் டுள்ளனர். (ஐ - 100)

## விமானப்படையைச் சேர்ந்த மூவர் முள்ளிவாய்க்கால் கிழக்கில் கைது

புதையல் தோண்டிய குற்றச்சாட்டில்



முல்லைத்தீவு, ஜூன் 21

முள்ளிவாய்க்கால் கிழக்குப் நேற்று அதிகாலை புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடு பட்ட விமானப்படையைச் சேர்ந்த மூவரை முல்லைத்தீவுப் பொலி ஸார் கைது செய்துள்ளனர்.

புலிகளால் புதைத்து வைக் கப்பட்டதாகக் கூறப்படும் தங் கத்தை தேடியே இவர்கள் அப் பகுதியில் தோண்டும் நடவடிக் கையில் ஈடுபட்டனர் எனக் கூறப் பட்டது.

முள்ளிவாய்க்கால் கிழக்கு மில்லடிப் பகுதிக்கு அருகில் உள்ள ஆலமரம் ஒன்றின் கீழ் 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் போரின்போது இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் விடுதலைப் புலிகள் தங்கியிருந்த தடயங் கள் காணப்பட்ட பகுதியில் இவர்கள் தோண்டும் நடவடிக் கையில் ஈடுபட்டுள்ளனர்.

அங்கு நிலைகொண்டுள்ள படையினர் மூவரையும் கைது செய்ததுடன் சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளனர்.

இந்நிலையில் முல்லைத் தீவுப் பொலிஸார் சம்பவ இடத்துக் குச் சென்று மூவரையும் கைது செய்து விசாரணை மேற்கொண்ட போது, அவர்கள் முல்லைத்தீவில் நிலைகொண்டுள்ள விமானப் படையினர் எனத் தங்களை அடையாளப்படுத்தியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூன்று விமானப்படையினரையும் அவர் களின் அதிகாரி ஊடாக வாய் மூல வாக்குமூலம் பெறப்பட்டு பொலிஸ் பிணையில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையப் பொறுப்பதி காரி பி.ஹெட்டியாராச்சி தெரி வித்தார். (ஐ)

## தென்கிழக்குப் பல்கலையின் துணைவேந்தர் பதவியிழப்பு



பேராசிரியர் உமா குமாரசாமி பதில் கடமைக்கு நியமனம்

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தி ன் துணைவேந்தரின் கடமைகளை நிறைவேற்றும் நிறைவேற்று அதிகாரி யாக பேராசிரியர் உமா குமாரசாமி நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வரும்வகையில் வர்த்தமானி அறிவிப்பை உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல் கள் அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ விடுத்துள்ளார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தி ன் துணைவேந்தர் பேராசிரியர் எம்.எம். எம்.நாஜிமின் பதவிக் காலம் நிறைவடை வதற்கு மூன்று நாள்கள் முன்னதாகவே, அவரின் சேவை முடிவுறுத்தப்பட்டுள் ளது.

இதனையடுத்து, கடமைகளை நிறைவேற்றும் நிறைவேற்று அதிகாரி யாக பேராசிரியர் உமா குமாரசாமி நிய மிக்கப்பட்டுள்ளார். (ஐ)

# வாக்காளர் உரிமை தொடர்பில் முல்லைத்தீவில் விழிப்புணர்வு




முல்லைத்தீவு, ஜூன் 21

வாக்காளர் உரிமை தொடர்பிலான விழிப்புணர்வுப் பேரணி ஒன்று புதுக்குடியிருப்பில் நேற்று நடைபெற்றுள்ளது.

'உண்மையான சனநாயகம் வாக்குரிமையில் தங்கி யுள்ளது' என்ற தொனிப்பொருளில் முல்லைத்தீவு மாவட்டத் தேர்தல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் புதுக்குடியிருப்புச் சந்தியில் இருந்து புதுக்குடி யிருப்புப் பிரதேச செயலகம் வரை நடைபெற்ற இந்த விழிப்பு ணர்வுப் பேரணியில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உறுப்பினர் கள், பிரதேச செயலாளர்கள், தேர்தல் திணைக்கள அதிகா ரிகள், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

வாக்காளர்களின் வாக்குரிமை, வாக்காளர் தங்கள் வாக்கு களைப் பதிவு செய்வதன் கட்டாயம் தொடர்பிலும், ஜூலை 31 ஆம் திகதிக்கு முன்னர் வாக்காளர் கணக்கெடுப்பில் இணைத் துக் கொள்ளல் தொடர்பிலும் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இது நடைபெற்றது.

மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலை மையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட உதவித் தேர்தல் அதிகாரி ஆர்.சி.அமல்ராஜ், யாழ். மாவட்ட பிரதித் தேர்தல் ஆணையாளர் ரி.அகிலன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே.தனபாலசுந்தரம், முல்லைத்தீவு மாவட்ட தேர்தல் திணைக்கள அதிகாரி கா.காந் தீபன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

# ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்ற இலங்கைக்கு அமெ. முழு உதவி

## விடைபெறும் தூதுவர் கெஸாப் உறுதி

கொழும்பு, ஜூன் 21

ஐ.நா.மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசு முழுமையாக நிறைவேற்றுவதற்குச் சகல வழிகளிலும் அமெரிக்க உதவிகளை வழங்கும்.

– இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அப்துல் கெஸாப், கொழும்பு உயர்மட்டத்தை நேற்று நேரில் சந்தித்து உறுதியளித்துள்ளார் என அறிய வந்தது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையிலிருந்து அமெரிக்கா உத்தியோகபூர்வமாக வெளியேறியுள்ள நிலையில் இந்த உத்தரவாதத்தை அமெரிக்கத் தூதுவர் இலங்கைக்கு வழங்கியுள்ளார்.

இதேவேளை, மனித உரிமைகள் விவகாரங்களில் தன்னிச்சையாக நடந்து கொள்கிறது என்று குற்றம் சாட்டி ஐ.நா மனித உரிமைகள் சபையிலிருந்து அமெரிக்கா வெளியேறியுள்ளது.

சர்வதேச நாடுகளில் நடைபெறும் பல்வேறு விதமான மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக, ஐ.நாவால் சர்வதேச மனித உரிமைகள் சபை உருவாக்கப்பட்டது.

இந்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அமெரிக்கா இதன் செயல்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து வந்தது. பெரும்பாலான விவகாரங்களில் இந்த அமைப்பானது மிகவும் தன்னிச்சையாக செயல்பட்டு வருகிறது என்று அமெரிக்கா குற்றம் சாட்டி வந்தது.

அதிலும் குறிப்பாக இஸ்ரேல் தொடர்பான விவகாரங்களில் மனித உரிமை ஆணையகத்தின் நிலைப்பாடுகளை அமெரிக்கா கடுமையாக விமர்சித்து வந்தது. அத்துடன் பெரும்பாலான சமயங்களில் இந்த அமைப்பின் செயல்பாடு கேலிக் கூத்தாக அமைந்திருப்பதாகவும் அமெரிக்கா கூறியுள்ளது.

இந்நிலையில் ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தில் இருந்து அமெரிக்கா விலகுவதாக, ஐநாவுக்கான அமெரிக்கத் தூதர் நிக்கி ஹேலி அறிவித்தார்.

அமெரிக்கா ஜனாதிபதியாக ட்ரம்ப் பொறுப்பேற்ற பின்னர் யுனெஸ்கோ மற்றும் பருவநிலை மாற்றம் தொடர்பான பாரிஸ் உடன்பாடு ஆகியவற்றில் இருந்து அமெரிக்கா விலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இரவில் கடலட்டை பிடித்த 4 படகுகள் மடக்கப்பட்டன

## கட்டைக்காட்டுக்கு அருகே நேற்றிரவு சம்பவம்

கட்டைக்காடு, ஜூன் 21

நேற்று முன்னிரவு வெளியிடங்களில் இருந்து வந்து கட்டைக்காட்டுப் பகுதியில் சட்டவிரோதமாகக் கடலட்டை பிடிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த நான்கு படகுகளையும் அவற்றிலிருந்த வெளியூர் மீனவர்களையும், உள்ளூர் மீனவர்கள் தமது படகுகளில் சென்று மடக்கிக் கரைநோக்கிக் கூட்டி வந்து கொண்டிருந்தனர் என்று அப்பகுதியில் இருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

கரையிலிருந்து ஐந்து கிலோ மீற்றர் தொலைவுக்குள் – அதுவும் இரவு நேரத்தில் – வெளிச்சம் பாய்ச்சி – கடலட்டை பிடிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

வெளியிடங்களில் இருந்து வந்து வடமராட்சி கிழக்கில் வாடி அமைத்துத் தங்கியுள்ள மீனவர்கள் இந்தத் தடையை மீறி கரையிலிருந்து ஐந்து கிலோ மீற்றருக்கு உட்பட்ட பிரதேசத்தில் – இரவில் – கடலட்டை பிடிப்பதில் ஈடுபட்டிருந்த போது உள்ளூர் மீனவர்கள் நேற்றிரவு சத்தம் சந்தடியின்றிப் படகுகளில் சென்று அவர்களை மடக்கினர்.

உள்ளூர் மீனவர்களின் வருகையை அவதானித்து கடலட்டை பிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பல படகுகள் தப்பி ஓடின.

உள்ளூர் மீனவர்களினால் நான்கு படகுகள், அவற்றில் இருந்த பத்துவரையான வெளிப் பிரதேச மீனவர்களுடன் மடக்கப்பட்டன என்று இன்று அதிகாலை கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

மடக்கப்பட்ட மீனவர்களை அவர்களது படகுகளோடு கரைக்கு அழைத்து வரும் நடவடிக்கையில் உள்ளூர் மீனவர்கள் ஈடுபட்டிருந்தனர் எனவும் –

கரையில் அவர்களின் வருகையை எதிர்பார்த்து அதிகாரிகளோடு வடமாகாண சபை உறுப்பினர் சுகிர்தன் காத்திருந்தார் எனவும் –

இன்று அதிகாலை கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரட்டைப் பிரஜாவுரிமை வைத்திருக்கும் கோட்டாபய ராஜபக்ஷ, இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதானால் தனது அமெரிக்கப் பிரஜாவுரிமையைத் துறக்க வேண்டும். அப்படி அவர் துறப்பதற்கு அமெரிக்கா இலகுவில் இடமளிக்காது என்ற செய்தியை அரசியல் குண்டாக 'காலைக் கதிர்' நாளிதழ் வெளியிட்டுப் பெரும் சர்ச்சை தென்னிலங்கையில் ஓடிக் கொண்டிருப்பது பற்றிய விடயத்துக்கு நமது கதை திரும்பியது.

இந்தவிடயத்தைச்சுட்டிக்காட்டிய அந்த அரசியல்வாதிக்கு, இது குறித்துப் பேசுவதற்கு இரண்டு தகுதிகள் உள்ளன. அதனை முதலில் குறிப்பிட்டு விடுவது நல்லது என்று நினைக்கின்றேன்.

ஒன்று – தமிழ் விடுதலை அரசியலுக்குள் நுழைந்து உச்சத்தைத் தொட்டு, இப்போது அரசியலில் ஒதுக்கப்பட்டிருந்தாலும், விடுதலை அரசியல் குறித்து ரொம்ப அதிகம் பட்டறிவு கொண்டவர். அரசியல் உச்சத்திலிருந்து வீழ்த்தப்பட்ட பின்னர் சட்டத்துறையில் மேற்படிப்புக் கற்றுத் துறைதோய்ந்தவர்.

இரண்டு – கோட்டாபய ராஜபக்ஷ போன்று இரட்டைப் பிரஜாவுரிமை பெற எதிர்பார்த்துக் காத்து நிற்பவர். ஏற்கனவே அரசியல் உச்சத்திலிருந்து ஒதுக்கப்பட்டமையோடு இலங்கைப் பிரஜாவுரிமையைத் துறந்து, அயலகப் பிரஜாவுரிமைபெற்றவர். இப்போது இரண்டாவது பிரஜாவுரிமையை இலங்கையிடம் மீளப் பெறுவதற்காகக் காத்துக் கிடப்பவர்.

அவர் சுட்டிக்காட்டிய விடயம் இதுதான். இந்தத் தகவல் எனது மூளைக்கு இதுவரை படவில்லை – உறைக்கவில்லை – என்பதை அவர் சுட்டிக்காட்டிய பின்னர்தான் நான் உணர்ந்து கொண்டேன்.

*"இலங்கையில் இரட்டைப் பிரஜாவுரிமையைப் பெற்றிருக்கும் எவரும் முதலில் இலங்கைப் பிரஜாவுரிமையை வைத்துக் கொண்டு, அதனடிப்படையில் இரண்டாவது பிரஜாவுரிமையாக வெளிநாட்டின் பிரஜைக்குரிய உரிமையைப் பெற்றுக் கொள்ளவில்லை என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும்.*

*" இலங்கைப் பிரஜாவுரிமையுடன்வசிக்கும் எவருக்கும் அமெரிக்காவோ, மேற்குலகோ தான் தேடிச் சென்று இரண்டாவது பிரஜாவுரிமையை வழங்குவதில்லை.*

*" கோட்டாபய ராஜபக்ஷவாகட்டும், அல்லது நமது புலம்பெயர்தமிழர்களாகட்டும், கனடாவிலோ, அமெரிக்காவிலோ அல்லது பிற மேற்குலக நாடுகளிலோ தஞ்சம் புகுந்ததும் முதலிலே இலங்கைப் பிரஜாவுரிமையைத் துறந்து விடுகின்றனர். பின்னர் அந்த நாட்டின் பிரஜாவுரிமையை விண்ணப்பித்துப் பெறுகின்றனர். அந்த நாட்டின் பிரஜாவுரிமை இரண்டாவது பிரஜாவுரிமையாக அவர்கள் பெற்றுக் கொள்வதில்லை. அந்த நிலையில் அவர்களின் மூலப் பிரஜாவுரிமை அந்த நாட்டுக் குரியது. அதை வைத்துக் கொண்டு இரண்டாவது பிரஜாவுரிமையாகத்தான் பிறகு இலங்கைப் பிரஜாவுரிமையை திரும்ப விண்ணப்பித்துப் பெறுகின்றார்கள்.*

*" கோட்டாபய விடயத்திலும் இதுதான் நடந்தது.*

*"அவர் 1990 களின் முற்பகுதியில் அமெரிக்காவில் போய் இறங்கி, இலங்கையின் பிரஜாவுரிமையைத் துறந்து, அமெரிக்கப் பிரஜாவுரிமையைப் பெற்றார். அப்போது அவரது பிரதான – மூல –பிரஜாவுரிமை அமெரிக்காவினுடையதாக மாறியது.*

*"அதை வைத்துக் கொண்டு பின்னர், இப்போது இரண்டாவது பிரஜாவுரிமையாகத்தான் இலங்கையின் பிரஜைக்குரிய உரிமையை அவர் சுவீகரித்தார்.*

*"ஆக, இப்போது இலங்கைத் தேர்தல் களத்தில் குதிப்பதற்காக அவர் துறக்க விரும்புவது தமது இரட்டைப் பிரஜாவுரிமையில் மூலப்பிரஜாவுரிமையைஎன்பதை மறந்து விடாதீர்கள்.*

*" அதை அந்த நாடு சுலபமாக வீட்டுக் கொடுக்கும் என்று நான் நம்பவில்லை." –* என்றார் அந்த அரசியல்வாதி.

அமெரிக்காவிடமிருந்து இரட்டைப் பிரஜாவுரிமையைத் துறப்பது அப்படி ஒன்றும் இலகுவான காரியமல்ல என்கிறார் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் பொறிஸ் ஜோன்ஸன்.

அவரும் பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளின் பிரஜாவுரிமையைக் கொண்டவர். அதனால் இரண்டு நாடுகளினதும் வரி விதிப்புக்கு உட்பட்டு திண்டாடினார். அதனால் அமெரிக்கப் பிரஜாவுரிமையை விட்டொழிய முயற்சித்தார். ஆனால் அதை விடுவித்துக் கொள்வது மிகமிகச் சிக்கலான வேலை – என்கின்றார் அவர்.

அதுவும் யுத்தக் குற்றச்சாட்டுக்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் போன்றவற்றை எதிர்கொண்டிருக்கும் கோட்டாபய ராஜபக்ஷக்கு அமெரிக்கப் பிரஜாவுரிமையை விட்டொழிவது சிக்கலான விடயமாகத்தான் இருக்கும்.

இந்தவிடயத்தைஒருகொசுறுத் தகவலோடு முடிக்கலாம். நான் இதை எழுதும் போது – நேற்று –கோட்டாபய ராஜபக்ஷக்கு பிறந்த தினம். தமிழ்ப் பத்திரிகையாளர் என்ற முறையில் அவரோடு ஊடாடும் எனது உறவுநிலையின் அடிப்படையில், பிறந்த நாள் வாழ்த்துச் செய்தியை அவருக்கு அனுப்பி விட்டுத்தான் இதை வரைகிறேன்.

-மின்னல்-

# குற்றச் செயல்கள் குறைந்துள்ளன

## பிரதியமைச்சர் நளின் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 21

நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளனஎனராஜபக்ஷஅணியினர் கோஷமிட்டாலும் பொலிஸ் புள்ளி விவரங்களுக்கு அமைய ஆராயும் போது குற்றச்செயல்கள் குறைந்துள்ள விதத்தைப் புரிந்துக்கொள்ள முடியும் எனச் சட்டம் மற்றும் ஒழுங்கு இராஜாங்க அமைச்சர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ராஜபக்ஷவினர் ஆட்சி செய்த கடந்த 2014 ஆம் ஆண்டில் மாத்திரம் 548 கொலைச் சம்பவங்கள் நடந்துள்ளன. நல்லாட்சி அரசு பதவிக்கு வந்த கடந்த 2015 ஆம் ஆண்டில் கொலை குற்றங்கள் 476 ஆக குறைந்தன.

2016 ஆம் ஆண்டு 502 கொலை குற்றங்கள் நடந்துள்ளமையுடன் 2017 ஆம் ஆண்டு அது 452 ஆக குறைந்தது. கடந்த ஜனவரி மாதம் முதல் கடந்த மே மாதம் 31 ஆம் திகதி வரை 214 கொலை குற்றங்களே நடந்துள்ளன.

புள்ளி விவரங்களை பார்க்காது தாம் எண்ணியவாறு கருத்துக்களை வெளியிடுவது அனுபவம் வாய்ந்த அரசியல்வாதிகளுக்கு அழகல்ல – என்றார். (ஐ)

# மகாவலி படகு விபத்து; ஒருவரைக் காணவில்லை

கொழும்பு, ஜூன் 21

சவுதி அரேபியாவைச் சேர்ந்த 7 பேர் மகாவலி ஆற்றில் படகுச் சவாரி செய்தபோது, படகு கவிழ்ந்ததில் ஒருவர் காணாமற்போயுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தப் படகில் பயணித்த ஆறு பேர் காப்பாற்றப்பட்டுள்ளமையுடன் ஒருவர் நீரில் மூழ்கிக் காணாமல் போயுள்ளார் எனவும் பொலிஸார் கூறினர்.

மகாவலி ஆற்றின் கட்டுகஸ்தொட்ட, குஹாகொட பகுதியில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காணாமல் போனவரை தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் கூறப்பட்டது. (ஐ)

### காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளனர்.

கடந்த 18ஆம் திகதி திங்கள்கிழமை தொடக்கம் ஐ.நா மனித உரிமைகள் சபையின் 38 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இலங்கை, தமிழகம் மற்றும் புலம்பெயர் நாடுகளிலிருந்து தமிழ் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களை ஒருங்கிணைத்து தமிழர் இயக்கம் பல இராஜதந்திர வேலைத்திட்டங்களையும், கருத்தரங்குகளையும் ஜெனிவா மற்றும் ஐ.நா மனித உரிமைகள் சபையை மையப்படுத்திநடத்திவருகின்றது.

தாயகத்திலிருந்து ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வுக்குச் சென்றுள்ள வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள், தாம் தாயகத்தில் எதிர்நோக்கிய, இன்றும் எதிர்நோக்கும் அவலங்களை எடுத்துரைப்பர். (ஐ)

### மண்டைதீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சி.வீ.விக்னேஸ்வரனால் நேற்றுப் புதன்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டது.

ஆயிரம் கிராமியப் பாலங்கள் திட்டத்தின் கீழ் வடக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் 32 மில்லியன் ரூபா செலவில் இந்தப் பாலம் புதிதாக அமைக்கப்பட்டிருந்தது. (ஐ-7)

(மேலும் செய்திகள், படங்கள் 11 ஆம் பக்கத்தில்)

### காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலத்த சிரமத்தின் மத்தியில் தேடிக் கண்டு பிடித்துள்ளனர்.

வலி.வடக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த 61 ஏக்கர் நிலப்பரப்பு நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டது. அந்தப் பகுதியிலேயே காணாமற்போன பாடசாலைக் கட்டடம் அத்திபாரமாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

(விரிவான செய்தி 05ஆம் பக்கத்தில்)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மாகாணத் தேர்தல் பிந்தினால் அதனால் விக்கிக்கு பாதிப்பா?

மாகாண சபைத் தேர்தல்கள் குறித்து ஒரு முடிவை எடுப்பதற்காக அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்தை இன்று கூட்டியிருக்கின்றார் சபாநாயகர் கரு ஜெயசூரியா.

மாகாணசபைத் தேர்தல்கள் தொடர்பில் அரசின் நிலைப்பாடு யாது என்பதை ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கேட்டு அறிந்துகொண்டு இன்றைய கூட்டத்துக்கு வாருங்கள் என்று சம்பந்தப்பட்ட விவகாரத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற முறையில் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபாவை அவர் கேட்டிருக்கின்றார் என்றும் தகவல்.

மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக ஏற்கனவே இருந்த சட்ட முறைமையை மாற்றி, புதிய முறைமைக்கு ஏற்பாடு செய்யும் சட்டத்தைக் கொண்டு வந்து விட்டு, அந்தப் புதிய முறைமையை நடைமுறைப்படுத்துவதற்கான சட்ட ஏற்பாடுகளை நாடாளுமன்றுக்குக் கொண்டு வராமல் இழுத்தடிக்கும் நிலைமை தொடர்கின்றது. அதனால் இந்தத் தேர்தலை நடத்த முடியாத நிலை நீடிக்கின்றது. அது குறித்து ஏற்கனவே இப்பத்தியில் பல தடவைகள் பார்த்து விட்டோம்.

தேர்தலை எந்த முறைமையின் கீழ் நடத்தப் போகின்றீர்கள்? அப்படி நடத்துவதாயின் அதற்கான சட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கான கால வரையறை யாது? – என்பன குறித்தெல்லாம் திட்டவட்டமான, தீர்க்கமான ஒரு முடிவை எடுக்கும் நோக்கிலேயே அரசியல் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை இன்று சபாநாயகர் கூட்டுகின்றார் என்று கருதப்படுகின்றது.

இந்தத் தேர்தல் இந்த ஆண்டு இறுதியில் நடைபெறுமென அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டாலும், அது டிசெம்பரில் நடத்துவது சாத்தியமா என்பது அது தொடர்பான சட்டமூலங்கள் நாடாளுமன்றில் நிறைவேற்றப்படுவதிலேயே தங்கியிருக்கும் என்பது தெளிவு.

வடக்கு, கிழக்குத் தமிழர்களின் அரசியலிலும் இந்த உத்தேச மாகாணசபைத் தேர்தல் விவகாரம் முக்கிய இடத்தை வகிப்பது கவனிக்கத்தக்கது.

வடக்கு மாகாண சபையின் பதவிக் காலம் வரும் ஒக்டோபருடன் – இன்னும் நான்கு மாதங்களில் – முடிந்து விடும்.

அதன் பிறகு தேர்தல் எப்போது நடக்கும், புதிய சபை எப்போது பதவி ஏற்கும் என்பதே கேள்வி.

ஏற்கனவே தமிழ்க் கூட்டமைப்பின் சார்பில் முதலமைச்சராகிப் பதவி வகிக்கும் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் கூட்டமைப்புத் தலைமையுடன் குழம்பி நிற்கின்றார். தனிக் கட்சி, தனி அணி என அவர் தயாராகின்றார் என்று கேள்வி.

கொழும்பில் இருந்து தமது முதலமைச்சர் பதவிக்காக யாழ்ப்பாணம் வந்த நீதியரசர் விக்னேஸ்வரன், அந்தப் பதவி காரணமாகத் தமக்குக் கிடைத்துள்ள வசதி, வாய்ப்புகளை வைத்துக் கொண்டுதான் யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டிருக்கின்றார் என்பது சில தரப்புகளின் கணிப்பீடு.

இப்போதைய மாகாண சபையின் பதவிக் காலம் முடிந்தால் இந்த வசதி, வாய்ப்புகளை எல்லாம் அவர் இழந்து விடுவார். அதற்குப் பின்னர் அடுத்த தேர்தலுக்கான காலம் இழுபடுமானால் – பல மாதங்கள் கடந்து வருடமுமாகுமானால் – அவ்வளவு காலம் அவர் வடக்கு அரசியலில் இங்கு நின்று, நிலைத்துத் தாக்குப்பிடிக்க மாட்டார், தோளில் துண்டைத் தூக்கிப் போட்டுக் கொண்டு தம்பாட்டில் அரசியலிலிருந்து நடையைக் கட்டிக் கொண்டு புறப்பட்டு விடுவார். கொழும்புக்குப் போய்ச் சேர்ந்து விடுவார் என்றெல்லாம் அத்தரப்புகள் கணிப்பிடுகின்றன என்றும் தகவல்.

அப்படிக் கூட்டமைப்புத் தலைமைக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருப்பதாகவும் கூடத் தெரிகின்றது. அதனால் மாகாண சபைத் தேர்தல் தள்ளிப் போவதைக் கூட்டமைப்பும் ஆதரிக்க வேண்டும் என்றும் ஓர் ஆலோசனை உண்டு.

ஆனால், 2016 இல் தீர்வு, 2017 இல் தீர்வு, 2018 இற்குள்ளாவது தீர்வு என்று நம்பிக்கை காட்டி வரும் கூட்டமைப்புத் தலைமையின் சாயம் காலம் இழுபட இழுபட, அரசியல் தீர்வு விடயத்தில் வெளுத்துவிடும்.

மாகாண சபைத் தேர்தல்கள் அடுத்த வருடம் நடுப்பகுதி வரைத் தாமதமானால், இந்த அரசின் காலத்தில் தீர்வு சாத்தியமில்லை என்பதும் அப்போது உறுதியாகியிருக்கக் கூடும். தீர்வைக் கொண்டு வராவிட்டால் அரசியலில் இருந்து விலகுவேன் என்று குறிப்பிட்டுவரும் கூட்டமைப்புப் பேச்சாளர் சுமந்திரன் கூட அதனால், அப்போது அரசியலில் இருந்து ஒதுங்க வேண்டிய கட்டாய நிலைமை சூழ்ந்து வந்திருந்தாலும் கூட ஆச்சரியப்படுவதற்கு இடமில்லாமிருக்கும்.

வடக்கு மாகாண சபையின் பதவிக் காலம் முடிந்த கையோடு அதற்கான தேர்தல் நடத்தப்படாமல் காலம் இழுபடுமானால், அதனால் வடக்கில் பாதிக்கப்படப் போகின்ற தரப்பு கூட்டமைப்பாகத்தான் இருக்குமே தவிர, முதலமைச்சர் விக்னேஸ்வரன் தரப்பு அல்ல என்பதுதான் உண்மை.

# சுவாமிநாதனின் அமைச்சரவைப் பத்திரம்: போலிப் பிரசாரத்தில் மஹிந்த அணியினர்

## ராஜித சேனாரத்ன குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 21

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பில், மஹிந்த அணியினர் சிலருக்குப் பணம் வழங்கிப் பொய்யான தகவல்களைப் பரப்பி வருகின்றனர் என அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன குற்றம் சாட்டியுள்ளார்.

போரில் உயிரிழந்தோருக்கு இழப்பீடு வழங்குவது குறித்து மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனால் கொண்டுவரப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் தொடர்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவையின் வாராந்த முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தமக்கு வழங்கப்பட்டுள்ள மீள்குடியேற்ற அமைச்சருக்கான பொறுப்பாகவே இதனைச் செய்துள்ளார். எனினும், இது தொடர்பில் இறுதி முடிவுகளை எடுக்கும் அதிகாரம் அமைச்சரவைக்கே இருக்கிறது.

அவர் சமர்ப்பித்துள்ள பத்திரத்தில் பல்வேறு பிரிவுகள் காணப்படுகின்றன. இதில், பயங்கரவாதிகளுடன் தொடர்புடைய குடும்பங்களுக்கான நிவாரணம் எனும் ஒரு பிரிவை அகற்றி விட்டு, ஏனைய சலுகைகளை வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

எனினும், இந்த விடயம் தொடர்பில் தற்போது சில ஊடகங்கள் பொய்யான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றமையும் காணக் கூடியதாக இருக்கிறது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியினரே சிலருக்குப் பணம் வழங்கி இவ்வாறான பொய்யான தகவல்களைப் பரப்பி வருகின்றனர். இது தொடர்பிலான ஆதாரங்களும் தற்போது எம்மிடம் உள்ளன – என்றார். (ஐ)

## அன்னை இல்ல முன்பள்ளி மாணவர்களின் கண்காட்சி



கனகாம்பிகைக்குளம் அன்னை இல்லம் முன்பள்ளி மாணவர்களின் கண்காட்சி நேற்று ஆரம்பமானது. நாளையும் இடம்பெறவுள்ள இந்தக் காண்காட்சியில் மாணவர்களின் பல்வேறு ஆக்கங்கள் உட்பட பல பொருட்கள் காட்சியப்படுத்தப்பட்டுள்ளன.

பாரம்பரியம், விவசாயம், கழிவுப்பொருட்களைக் கொண்டு ஆக்கப்பட்டுள்ள பொருட்கள், தொங்கு பாலம், இருட்டறை, உள்ளிட்ட பல பொருட்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. அங்கு வைக்கப்பட்டுள்ள மாதிரி மாவீரர் துயிலுமில்லம் அனைவரையும் கவனத்தையும் ஈர்த்தது. கண்காட்சியை அமலமரித் தியாகிகள் சபையின் வடக்கு மாகாண முதல்வர் அருட் தந்தை எட்வின் வசந்த ராசா ஆரம்பித்து வைத்தார்.

கிளிநொச்சி கல்வி வலய ஆரம்பப் பிள்ளைப்பருவ உதவிக் கல்விப் பணிப்பாளர் விந்தன், கிளிநொச்சி சின்மயா மிஷன் குரு முதல்வர் மற்றும் ஏனைய முன் பள்ளி மாணவர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## நாடாளுமன்ற காணிக்கான நிரந்தர உறுதி கையளிப்பு

நாடாளுமன்றம் அமைந்துள்ள காணிக்கான எல்லைகள் குறிப்பிடப்பட்ட நிரந்தர உறுதி நேற்றுப் பிற்பகல் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் அமைச்சர் கயந்த கருணாதிலகவினால் சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் கையளிக்கப்பட்டது.

1982 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதிக்குரிய உரிமைப் பத்திரத்தின் மூலம் நாடாளுமன்றக் கட்டத் தொகுதிக்கான இந்தக் காணி பெற்றுக் கொள்ளப்பட்டது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியும், சபாநாயகர் உத்தி யோக பூர்வ இல்லமும் அமைந்துள்ள காணிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் உத்தியோக பூர்வ இல்லக் கட்டடத் தொகுதிக் குரிய காணிக்குமான நிரந்தர உறுதி வழங்கப்படும் என்று அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தபால் ஊழியர்கள் நடத்தும் பகிஷ்கரிப்பு தொடர்கிறது



கொழும்பு, ஜூன் 21

தபால் ஊழியர்கள் ஆரம்பித்துள்ள வேலை நிறுத்தப் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது என ஒன்றிணைந்த தபால் தொழிற் சங்க முன்னணி தெரிவித்தது.

பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ள தபால் தொழிற்சங்கம், தமது கோரிக்கைகளுக்குத் தீர்வு கிடைக்கும் வரை போராட்டத்தைத் தொடர உள்ளதாகக் கூறியுள்ளது.

அந்த முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் சிந்தக பண்டார இதனைக் குறிப்பிட்டார். (ஐ)

## அதிவேக பாதையில் விபத்து; இரு வெளிநாட்டவர்கள் பலி

கொழும்பு, ஜூன் 21

தெற்கு அதிவேக வீதியில் நேற்று அதிகாலை 5.00 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஆஸ்திரேலிய நாட்டுப் பிரஜை ஒருவரும் 4 வயதுச் சிறுமி ஒருவரும் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எல்பிட்டிய பொலிஸ் பிரிவிலுள்ள குருந்துகஹஹெதெக்ம பிரதேசத்தில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக வீதியின் அருகில் நிறுத்தப்பட்டிருந்த லொறி ஒன்றின் பின் பக்கத்தில் வான் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

வானில் பயணித்த ஆஸ்திரேலியப் பிரஜைகள் நான்கு பேர் காயமடைந்து களுத்துறை, நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பாக எல்பிட்டிய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

## அக்கராயன் காட்டில் கைதாகினார் ஒருவர்

கிளிநொச்சி, ஜூன் 21

கிளிநொச்சி அக்கராயனின் காட்டுப் பகுதிக்குள் விடுதலைப் புலிகளின் தங்கம் புதைக்கப்பட்டதாகத் தெரிவித்து தேடுதல் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றது. சிறப்பு அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், அவர்களே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

பூநகரியைச் சேர்ந்த ஒருவரே கைது செய்யப்பட்டுக் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அவரிடமிருந்து ஒரு கொடி ரூபா பெறுமதியான புதையல் தேடும் கருவியும் மீட்கப்பட்டுள்ளது என்று கிளிநொச்சிப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ)

## நாளை

22.06.2018
வெள்ளிக்கிழமை
நட்சத்திரம் : அத்தம் கா. 5.56 வரை
திதி : நவமி மு.ப. 7.46 வரை
சுபநேரம் : 5.54 – 7.24 வரை
இராகுகாலம் :10.24 – 11.54 வரை

# மத்திய மாகாண சபையில் 10 சு.கவினர் மஹிந்த அணிக்கு!



கொழும்பு, ஜூன் 21

மத்திய மாகாண சபையின் பிரதித் தவிசாளர் ஆர்.எம்.எஸ். பீ.ரத்நாயக்க தலைமையிலான பத்து பேர்கொண்ட மத்திய மாகாணசபை உறுப்பினர்கள் நேற்றிலிருந்து தாம் பொதுஜன பெரமுன கட்சியை (தாமரை மொட்டு) ஆதரிக்கின்றமையுடன் எதிர்காலத்தில் மகிந்த ராஜ பக்ஷவின் வழிகாட்டலுக்கேற்ப இயங்க உள்ளனர் எனவும் தெரிவித்தனர்.

மத்திய மாகாண சபைக் கட்டடத் தொகுதியிலுள்ள பிரதித் தவிசாளர்காரியாலயத்தில்நடந்த ஊடகச் சந்திப்பின்போதே அவர்கள் இதனைத் தெரிவித்தனர். மேற்படி ஊடக மாநாட்டில் பிரதித் தவிசாளர் ஆர்.எம். எஸ்.பீ.ரத்நாயக்கா, முன்னாள் மாகாண சபை அமைச்சர்களான பிரமித்த பண்டார தென்ன கோன், நிமல் பியதிஸ்ஸ ஆகியோரும் அங்கத்தவர்களான குணதிலக ராஜபக்ஷ, எம்.ஜி.ஜயசிங்க, கமல் பெலிகொல்ல, வீரசிங்க அலுத்கமகே, டி.ரி.ஜயதிஸ்ஸ, திலக் பண்டார, பராக்கிரம திசாநாயக்க ஆகிய பத்துப் பேர் மேற்படி சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இதன்போது பிரதித் தலைவர் ஆர். எம்.எஸ்.பீ.ரத்நாயக்க தெரிவித்தவை வருமாறு:-

நான் 1993 ஆம் ஆண்டு முதல் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இணைந்து இன்றுவரை கட்சிக்காகப் பாடுபட்டு வருகிறேன். எனது சகோதரர்களும் அவ்வாறே எமது கட்சியின் வெற்றிக்காகப் பாடுபட்டனர். நாம் இன்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர்தான். நான் குறிப்பாக 1999, 2004, 2010, 2013 மற்றும் தற்போதைய சபை ஆகிய அனைத்திலும் அங்கத்தவராக இருந்துள்ளேன்.

இன்று மக்களின் எதிர்பார்ப்பு எதுவோ அதனை நிறைவேற்றுவதுதான் எமது கடமை. அந்த வகையில்தற்போது நாடுபோகும் போக்கில் மக்களுக்கு திருப்தி இல்லை. எனவே அவர்கள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ தலைமையிலான ஆட்சி மலர வேண்டும் என்பதையே விரும்புகின்றனர். எனவேதான், இதன் பிறகு மஹிந்த ராஜபக்ஷ எதனை முன் வைக்கிறாரோ அதனை நாம் ஏற்று நடப்போம்.

தற்போதைய மத்திய மாகாண சபையின் ஆயுள் காலம் இன்னும் மூன்று மாதங்கள் மட்டுமே. எனவே அதனை அடுத்து வரும் மாகாண சபைத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ முதலமைச்சராக யாரை சிபாரிசு செய்கிறாரோ அவரை நாம் ஏற்று அதன்படி செயற்படுவோம். மஹிந்த ராஜபக்ஷ ஒரு தென்னம் மட்டையைக் கொண்டு வந்து நிறுத்தி அதற்கு வாக்களியுங்கள் என்று சொன்னாலும் அதனை செய்யவும் தயார் – என்றார்.

முன்னாள் மத்திய மாகாண விவசாய அமைச்சர் நிமல் பியதிஸ்ஸ தெரிவித்ததவை வருமாறு:-

பௌத்த துறவிகளுக்கு காவி உடைக்குப் பதில் ஜம்பர் என்ற கைதி உடை அணிவிக்கும் ஆட்சியை மாற்ற வேண்டும். இதற்காக ஜனபவர என்ற வேலைத் திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளோம். எதிர்வரும் 29 ஆம் திகதி கண்டி தபால் கேட்போர் கூடத்தில் இது தொடர்பாகக் கூட்டம் ஒன்று நடத்தவுள்ளோம். – என்றார்.

முன்னாள் மத்திய மாகாண விளையாட்டுத்துறை அமைச்சர் பிரமித்த பண்டார தென்ன கோன் தெரிவித்தவை வருமாறு:-

வெகு விரைவில் மாகாண சபைத் தேர்தல் நடைபெறவுள்ளது. அதில் விருப்பு வாக்கு முறையா? அதற்கும் தயார். தொகுதிவாரியா? அதற்கும் தயார். குலுக்கல் முறையா? அதற்கும் தயார். எந்த அடிப்படையிலும் நாம் மஹிந்த ராஜ பக்ஷ சார்ந்துள்ள பொதுஜன பெரமுன(தாமரை மொட்டு) கட்சியை வெற்றிபெறச் செய்வோம்.

அடுத்தடுத்து சில மாதங்களில் நாட்டில் பெரும் மாற்றங்கள் ஏற்படப்போகின்றன. பொறுத்திருந்து பாருங்கள். அதுவரை புத்திசாதுரியமாகவும், விவேகமாகவும் சிந்தித்து செயலாற்றுங்கள். அரசியல் ரீதியில் நீங்கள் எதிர்பார்த்திராத பல தலைவர்கள் மஹிந்த ராஜபக்ஷவுடன் கைகோக்க உள்ளனர். அது பற்றி பின்னர் தெரியவரும். – என்றார்.

## பலாலி விமான நிலையக் காணிகளுக்கு 34 வருடங்களின் பின் நஷ்டஈட்டு ஆய்வு

பலாலி விமான நிலைய விஸ்தரிப்பிற்கென சுவீகரிக்கப்பட்ட காணிகளிற்கு நஷ்டஈடு வழங்குவது தொடர்பில் ஆராய 34 வருடங்களின் பின்னர் யாழ்.மாவட்ட செயலாளர் அழைப்பு விடுத்துள்ளார்.

1984ஆம் ஆண்டு பலாலி விமானநிலைய விஸ்தரிப்பிற்கென பொதுமக்களின் 700 ஏக்கருக்கும் மேற்பட்ட காணி பலாத்காரமாகப் பறிக்கப்பட்டிருந்தது. இக்காணிகளின் பெரும்பாலான உரிமையாளர்களுக்கு நஷ்டஈடு இலங்கை அரசினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. தொடர்ந்து ஏற்பட்ட இடப்பெயர்வினால் நஷ்டஈட்டுக் கொடுப்பனவு பற்றிய விடயம் கிடப்பில் போடப்பட்டிருந்தது.

இந்நிலையில் தற்போது காணிகளை உத்தியோகபூர்வமாக சுவீகரிக்க அரசு நடவடிக்கைகளை எடுத்துவருவதுடன் சுவீகரிக்கப்பட்ட காணி உரிமையாளர்களது ஆட்சேபனைகள் தொடர்பில் தெல்லிப்பழை பிரதேச செயலகம் ஊடாக விளம்பரங்களை பிரசுரித்துமிருந்தது.

இந்நிலையில் தற்போது சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளுக்கான நஷ்டஈடு தொடர்பில் ஆராய வட மாகாண முதலமைச்சர் தலைமையில் ஆய்வுக்கூட்டமொன்றிற்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள் மற்றும் காணி ஆணையாளர் உள்ளிட்டவர்கள் இக்கூட்டத்தில் பங்கெடுக்கவுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

இதனிடையே குறித்த நட்டஈடு வழங்கும் நடவடிக்கை அடாத்தாக இராணுவம் வலிவடக்கில் கைப்பற்றி வைத்துள்ள 4 ஆயிரம் ஏக்கர் வரையிலான காணிகளை நிரந்தரமாக சுவீகரிக்கும் நடவடிக்கையின் ஓர் ஆரம்ப கட்டமாக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது என சில வட்டாரங்கள் தெரிவித்தன.

வலி வடக்கில் விடுவிக்கப்பட்ட பகுதியில்

## நூற்றாண்டு கால பழமை மிகு பாடசாலையைக் காணோம்!



பலாலி, ஜூன் 21

பலாலி வடக்கில் இருந்த பாடசாலை கட்டடம் காணாமல் போன நிலையில் அதன் அத்திபாரத்தை மக்கள் பலத்த சிரமத்தின் மத்தியில் தேடிக்கண்டு பிடித்துள்ளனர். வலி.வடக்கில் இராணுவ கட்டுபாட்டில் இருந்த 61 ஏக்கர் நிலப்பரப்பு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை விடுவிக்கப்பட்டது.

விடுவிக்கப்பட்ட 61 ஏக்கரில் பலாலி வடக்கு ஜே/ 254 கிராம சேவையாளர் பிரிவில் காணப்பட்ட பலாலி வடக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை கட்டடத்தையே காணவில்லை. அந்தப் பகுதி நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டதை அடுத்து , மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று, தமது காணிகளைப் பார்வையிட்டனர்.

அதன் போது அப்பகுதியில் இருந்த பாடசாலையை தேடியபோது அதனை காணவில்லை. பின்னர் அப்பகுதியில் இருந்த தொட்டி ஒன்றை அடையாளப்படுத்தி தேடிய போது பாடசாலை கட்டடம் இடித்து தரைமட்டம் ஆக்கப்பட்டு கட்டட இடிபாடுகள் அகற்றப்பட்ட நிலையில் அத்திபாரத்தை மாத்திரமே மக்கள் கண்டனர். நூற்றாண்டு பழமை வாய்ந்த அந்தப் பாடசாலை கட்டடம் இடித்து தரைமட்டம் ஆக்கப்பட்டமை அப்பகுதி மக்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

## மின்தடை

யாழ்ப்பாணம், ஜூன் 21

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் -** சிவகாமி அம்மன் கோவிலடியிலும்,

**வவுனியா பிரதேசத்தில் -** மலையாபருத்திக்குளம் கிராமம், மகாமயிலங்குளம், குடாகச்சக்கொடிய, துட்டுவாகை, அண்ணாநகர், பூந்தோட்டம், குடாகச்சகொடிய கல் உடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும், மின்விநியோகம் தடைபட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

(இ)

## இலங்கையை நிர்ப்பந்திப்பதற்கு ஐ.நாவுக்கு வளப் பற்றாக்குறையாம்!

போதுமான வளங்கள் இல்லாத காரணத்தினாலேயே பொறுப்புகூறல் பொறிமுறை விடயத்தில் இலங்கை அரசை ஐ.நா.வினால் நிர்ப்பந்திக்க முடியாமல் இருப்பதாக ஐ.நா. செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டர்ஸ் தெரிவித்துள்ளார்.

ஒஸ்லோ நகரில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை விடயத்தில் ஐ.நா. ஏன் தோல்வியை சந்திக்கவேண்டி ஏற்பட்டது. இலங்கை விடயத்தில் ஏன் இதுவரை சரியான பொறுப்புக்கூறல் நடை முறைப்படுத்தப்படவில்லை–என்றுஎழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே ஐ.நா. செயலாளர் நாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

'நாடுகளுக்குப் பொறுப்புக்கள் இருக்கின்றன. சர்வதேச சட்டங்களை ஏற்றுக் கடைபிடிக்க வேண்டிய பொறுப்புக்கள் அவற்றுக்கு இருக்கின்றன. ஆனால் அதனை இலங்கை செய்ய வில்லை. வளப்பற்றாக்குறைகள் காரணமாக ஐ.நா.வினாலும்



ஐ.நா.செயலாளர் நாயகம் கூறுகிறார்

அதனை சரியான முறையில் செய்ய முடியவில்லை. இந்த விடயம் பற்றி நங்கள் ஆராய்ந்து எங்களது அணுகுமுறைகளை மாற்றி வருகிறோம். இன அழிப்பு, யுத்த குற்றங்கள், மனிதத்திற்கு எதிரான குற்றங்கள் போன்றனவற்றிக்கான பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தும் பொறிமுறை இல்லை" – என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(உ)

# யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக சர்வதேச பெண்கள் மாநாடு

'யுத்தத்தின் பின்னரான சூழலில் பெண்களின் வலுவூட்டல் மற்றும் தலைமைத்துவம்' என்ற தலைப்பில் சர்வதேச பெண்கள் மாநாடு எதிர்வரும் ஜூலை மாதம் 21 மற்றும் 22 திகதிகளில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் நடைபெறும்.

இதற்கு பல்வேறு நாடுகளிலிருந்தும் பெண்கள் தொடர்பாகப் பணியாற்றும் ஆண் பெண் இருபாலாரும் பங்குபற்றவுள்ளார்கள்.

மாநாட்டில் ஆய்வாளர்கள் சமர்ப்பிக் கக் கூடிய ஆய்வு அறிக்கைகளுக்கான கருப்பொருள்கள் தரப்பட்டுள்ளன. அவை வருமாறு:-

★பெண்களை வலுவூட்டலில் உள சமூக மேம்பாட்டுச் செயற்திட்டங்கள்.

★வளர் பருவத்தினர் எதிர்கொள்ளும் சவால்கள்.

★சமூகமயப்படுத்தல், பாதுகாப்பு தொடர்பாக பெண் கள் எதிர்கொள்ளும் சவால்கள்.

★பெண்களுக்கெதிரானவன்முறை கலாசாரத்தை எதிர்கொள்ளுதல்.

★பால் நிலைசமத்துவமும் அதனைப் புரிந்து கொள்ளலும்.

★பெண்கள் தொழிற்சக்தியும், தொழில் பார்க்கும் சூழலும்.

★பெண்களைவலுவூட்டலில் மனிதாபிமான தொண்டுநிறுவனங்களின் வகி பங்கு.

★பெண்களைவலுவூட்டல்தொடர்பான கொள்கை திட்டங்கள்.

★பெண்களின் பாலியல் மற்றும் இன விருத்தி உரிமைகள்.

★பெண்களின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் நுண்நிதிக்கடன்கள்.

★பெண்களும் ஊடகங்களும்.

மேற்கூறப்பட்டவிடயங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏதாவதுஒருவிடயத்தில் ஆய்வுஅறிக்கையாரொருவரும் சமர்ப்பிக்கமுடியும். அதேவேளை ஆய்வு மாநாட்டில் அவதானிகளாகவும் பங்கு கொள்ள முடியும்.

ஆய்வுகள் வெறுமனேகல்வியியலாளர்களின் பதவியுயர்வுக்கானவையாக அமையாது அவை பிரயோக ஆய்வுகளாக அமையவேண்டும் என்ற நோக்கம் கருதி தன்னார்வத் தொண்டுப் பணியாளர்களும் அமைப்புக்களும் ஒன்றிணைந்து இந்த மாநாடு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. யாழ் மாவட்ட அரசசார் பற்ற நிறுவனங்களின் இணையம் இந்த மாநாட்டை ஒழுங்கு செய்து நடத்துகின்றது.

இந்த மாநாட்டிற்கு இலங்கையின் பெண்கள் விவகார அமைச்சர் பிரதம விருந்தினராக கலந்து கொள்வதோடு இலங்கைப் பிரதமரின் பாரியார் திருமதி மைத்திரி விக்கிரமசிங்க முதன்மை ஆய்வுரையை நிகழ்த்தவுள்ளார்.

இதற்குஉலகெங்குமுள்ள தமிழர்கள் தங்கள் ஆதரவை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம். - என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ)

## தினசரி ராசி பலன் (21.06.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆனித்திங்கள் 7 ஆம் நாள் வியாழக்கிழமை. நவமித்திதி பி.இ.3.19மணி வரை பின்னர் தசமி.நட்சத்திரம்: அத்தம் பி.இ. 1.26 மணி வரை பின்னர் சித்திரை. சித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - பகல் 1.47 மணி முதல் 3.21 மணி வரை.

**சுபநேரம்** - காலை 7.27 மணி முதல் 8.56 மணி வரை.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - ஆனி மாத வளர்பிறை நவமி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - அத்தம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** நன்மையான நாள். எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிட்டும். அசையும், அசையாச் சொத்துக்கள் வாங்கும் வாய்ப்பு கிட்டும். இதுவரை பகையாய் இருந்தவர்கள் நட்புடன் பழகுவார்கள்.

**ரிஷபம்** மேன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் மறையும். புதிய வாய்ப்புகள் தேடி வரும். விட்டுப்பிரிந்த உறவுகள் மீண்டும் இணைய வாய்ப்பு உண்டாகும்.

**மிதுனம்** குழப்பமான நாள். பணவரவு குறையும். மனம் சஞ்சல நிலையில் இருக்கும். உடல்நலம் பாதிப்படையும். குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் தலை தூக்கும். திருமண வயதினருக்கு காரியங்கள் கைகூட தாமதமாகும்.

**கடகம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள்வரவு சுமாராக இருக்கும். செலவுகள் அளவுக்கதிகமாக காணப்படும். உத்தியோகத்தர்கள் தங்கள் பணிகளை செய்து முடிப்பதில் சற்று இடையூறுகள் உண்டாகும்.

**சிம்மம்** ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் ஒற்றுமை சிறப்பாக இருக்கும். உற்றார், உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். சகோதர வழி உதவிகள் கிடைக்கும்.

**கன்னி** அதிர்ஷ்டமான நாள். தனலாபம் அதிகரிக்கும். தடைப்பட்ட சுபகாரியங்களில்வெற்றி கிட்டும். உற்றார், உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு வெளியூர், வெளிநாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பு கிட்டும்.

**துலாம்** அலைச்சல் மிகுந்த நாள். சுய தொழில் செய்பவர்கள் நிறைய அலைய வேண்டிய வரும். சிலர் பணப் பற்றாக் குறையால் கடன் வாங்க அலைவர். சிலர் தொழில் இடமாற்றத்தால் குடியிருக்க வாடகை வீடு தேடித் திரிவர்.

**விருச்சிகம்** ஆக்கபூர்வமான நாள். பணவரவுகளில் இருந்த நெருக்கடி குறையும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். விரும்பிய காரியங்கள் யாவும் நிறைவேறும். உத்தியோகத்தில் சிலர் விரும்பிய இடமாற்றங்களைப் பெறுவர்.

**தனுசு** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும் இறக்குமாக இருக்கும். உடல்நிலையில் அக்கறை எடுத்துக் கொள்வது நல்லது. வாகன பயணம் செய்யும் போது கவனம் தேவை.

**மகரம்** உயர்வான நாள். பொருளாதாரம் உயர்வடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். பிரிந்திருந்த உறவுகள் மீண்டும் ஒன்றிணையும் வாய்ப்புகள் உண்டாகும். உத்தியோக உயர்வு கிடைக்கும்.

**கும்பம்** துயரமான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் வீண் சச்சரவுகள் உண்டாகும். எடுக்கும் முயற்சிகள் தோல்வியடையும். உடல் ஆரோக்கியத்தில் பாதிப்பு ஏற்பட்டு மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும்.

**மீனம்** விருத்தியான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். எதையும் எளிதில் எதிர்கொண்டு வெற்றியையும், லாபத்தையும் பெறுவார்கள். தடைப்பட்ட திருமணங்கள் யாவும் தடை விலகி கைகூடும்.

சந்திராஷ்டம நாள்; **அவிட்டம் 3ஆம், 4ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1ஆம், 2ஆம் 3 ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**



# நோய் தீர்க்கும் யோகக் கலை

உலக யோகா தினம் ஆண்டு தோறும் ஜூன் 21 ஆம் நாள் கொண்டாடப்படும். யோகா என்பது உடல், மனம், அறிவு, உணர்வு மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்கும், சமன்பாட்டிற்கும் உதவிடும் ஒப்பற்ற கலை ஆகும். யோகா என்னும் கலை வாழ்க்கை அறிவியல் மற்றும் வாழும் கலை ஆகும். பதஞ்சலி முனிவரால் இக்கலை இந்தியாவில் தோன்றி வளர்ந்து வழிவழியாய் வரும் ஓர் ஒழுக்க நெறியாகும். இது உடலையும் உள்ளத்தையும் நலத்துடன் வைத்துப் போற்றும் ஒழுக்கங்களைப் பற்றிய நெறி.

யோகாவின் பல்வேறு மரபுகள் இந்து, புத்த மற்றும் சமண மதங்களில் காணப்படுகின்றன.மேலும் யோகா வஜ்ரயான மற்றும் திபெத்திய புத்த மத தத்துவங்களில் ஒரு முக்கிய பகுதியாக விளங்குகிறது.

யோகம் என்ற சொல்லுக்கு இணை தல் அல்லது இணக்கமாக இருத்தல் என்று பொருள். யோகம் என்பது இந்தியாவில் உள்ள ஆறு தத்துவமுறைகளில் முக்கியமான ஒன்றாகும். யோகாவின் தோற்றம் விவாதத்திற்கு உட்பட்டு இருக்கின்றது. இது வேத காலத்திற்கு முன்பே தோன்றி இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இந்துமதத்தின் ஊற்றுக்கண்களாகவும் மனிதவாழ்வியலை வளம்படுத்து கின்றனவாகவும் விளங்கும் இந்தியப் பெருங்கலை வடிவங்களுள் ஒன்றாகத் திகழும் யோகக் கலைக்கு காத்திரமான பங்குண்டு.

மனிதவாழ்வியலின் பன்முகத்தளத்தில் ஒப்புயர்வற்றதாக விளங்கும் இக் கலையின் மகத்துவத்தை தற்காலத்தில் சர்வதேசம் நன்குணர்ந்திருக்கின்றது என்பதனை நிதர்சனமாக்குவதாக உலக மக்களால் இன, மத, பேதம் கடந்து அனுசரிக்கப்பட்டு வருகின்ற சர்வதேச யோகா தினத்தைத் குறிப்பிடலாம். சமகாலத்தில் மேலைத்தேய நாடுகளைப் பொறுத்த வரையில் யோகக் கலையானது பரவலாக்கம் பெற்று வருகின்றமையைக் காணலாம்.

ஆரம்பக்கல்வி நிறுவனங்களிலிருந்து உயர்பல்கலைக்கழகங்கள்வரை இக்கலைக்கு உயரிய கௌரவம் வழங்கப்பட்டிருப்பது - வழங்கப்பட்டு வருவது இக் கலையின் பயனுறுதித் தன்மையை - சிறப்பினைப் பறைசாற்றி நிற்கிறது.

தற்கா லத்தில் உலகளாவிய ரீதியாக யோகப்பயிற்சிவழங்கும் நிலையங்களின் எண்ணிக்கையும் பெருகி வருகின்றமையும் அதனை கற்றுக் கொள்வதற்கான மக்கள் காட்டும் அதீத ஈடுபாடுகளும் ஆர்வங்களும் அதிகரித்து வருகின்றமையும் இக்கலை மீதான மக்களின் பற்றுறுதியை வெளிப்படுத்துகின்றது.

கால மாற்றத்தால் மக்களின் நாளாந்த வாழ்வியல் கூறுகளிலும் மாற்றங்கள் நிகழ்ந்துவருகின்றநிலையில் இம் மாற்றங்களின் விளைவினால் அவர்களின் உடல், உள, சமூக, ஆன்மிக ரீதியிலான நிலைகளிலும் எதிர்மறையான தாக்கங்களும் முனைப்புற்று விளங்குகின்றன. நவீன மருத்துவ விஞ்ஞானமானது வளர்ச்சியடைந்து உச்சம் தொட்டு நின்றாலும் அதற்கு ஈடு கொடுக்க முடியாதளவிற்கும் மனித ஆரோக்கியத்திற்கு வேட்டு வைக்கும் அளவிற்கும் உடல், உளரீதியிலான நோய்களின் தாக்கங் களும் பல்வேறுவடிவங்களில் வேகமெடுத்து வருவதனையும் காணலாம்.

இவற்றுக்கான ஒட்டுமொத்த அணுகுமுறையாக- தீர்வாக நமது அன்றாட வாழ்வியல் நடவடிக்கைகளில் ஒன்றாக, யோகப் பயிற்சி முறைகளைக்கைக் கொண்டால், எமது எதிர்கால வாழ்வு பிரகாசமானதாக மாறும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. எனவே, இத்தகு மகத்துவம்மிக்க, மிகப் புராதனகாலத்துக் கலையானயோகக் கலையினை இன்றளவிலும் புனிதங்கெடாமல் பாதுகாத்து எதிர்காலதலைமுறைக்கும் கொண்டு செல்லவேண்டிய வரலாற்றுக் கடமையும் பொறுப்பும் நமக்கிருக்கின்றது என்பதனை நாம் நன்குணர்ந்து செயற்படவேண்டும். ★



# மாகாண சபைத் தேர்தல்: இன்று முடிவுகள் தெரியும்!

கொழும்பு,ஜுன் 21

மாகாணசபைத் தேர்தலை எப்போது நடத்துவது என்பது குறித்து நாடாளுமன்ற கட்சித் தலைவர்கள் இன்று முடிவு செய்வார்கள் என சபாநாயகர் கரு ஜெயசூரிய நேற்று முன்தினம் அறிவித்தார்.

'வியாழன்று நடக்கும் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் மாகாண சபைத் தேர்தலை எப்போது நடத்துவது என்று முடிவு செய்யப்படும்.

"இந்தக் கூட்டத்தில் பங்கேற்கு மாறு, உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.




"தேர்தலை நடத்துவது தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சர் நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கலந்தாலோசித்து விட்டு இன்று கட்சித் தலைவர்களுக்கு தெளிவான பதிலை வழங்க வேண்டும்.

"இல்லாவிட்டால், நான் அவரிடம் இதுபற்றிக் கேள்வி எழுப்ப வேண்டியிருக்கும்."- என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

# மீண்டும் 'பூ' சின்னத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி

கொழும்பு,ஜுன் 21

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல். எவ்.) மீண்டும் தனது கட்சி சின்னமான பூ சின்னத்தை மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தும் வேலையில் ஈடுபட்டுள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப் பில் அங்கத்துவம் பெற்றிருந்த சுரேஷ் பிறேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ் . கூட்டமைப்பு தலைமையுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக கடந்த உள்ளூராட்சி தேர்தலுக்கு முன்னதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலகியிருந்தது.

இதன்பின் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணியுடன் இணைந்து கூட்டு அமைப்பதற்கான முயற் சிகள் இடம்பெற்றிருந்தன. இதன்போது கட்சி சின்னமாக எதனைப் பயன்படுத்துவது என்ற முரண்பாட்டின் காரணமாக அந்த கூட்டு உருவாக்கப்படவில்லை. இருவரும் வேறு வேறு கூட்டுக்களையே அமைத்திருந்தனர்.

இதன் பின்னர், கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து அதன் உதயசூரியன் சின்னத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். போட்டியிட்டு இருந்தது. இருப்பினும் தேர்தல் முடிந்து சில மாதங்கள் கடந்துள்ள நிலையில் அக்கட்சிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியுடனான உறவுகளிலும் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இனி, மாகாண சபைத் தேர்தல் வரவிருக்கும் சூழ்நிலையில் தனது கட்சி சின்னமான பூவை மீண்டும் மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தும் வேலையில் ஈ.பி.ஆர்.எல்.எவ். ஈடுபட்டுள்ளது. அதன் ஒரு கட்டமாக ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் மறைந்த தலைவர் தோழர் பத்மநாபாவின் மறைவை ஒட்டிய தியாகிகள் தினத்தை முன்னிட்டு அக்கட்சி அச்சிட்டு வெளியிட்டுள்ள சுவரொட்டிகளில் தனது கட்சி சின்னத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. அந்தச் சுவரொட்டிகள் வன்னியின் பல்வேறு இடங்களிலும் ஒட்டப்பட்டுள்ளன.

# புலிகளின் குடும்பங்களுக்கு இழப்பீடா? அமைச்சரவைப் பத்திரம் மீள நிராகரிப்பு

கொழும்பு,ஜுன் 21

போரில் இறந்த விடுதலைப் புலிகளின் குடும்பங்களுக்கு இழப்பீடுகளை வழங்குவதற்காக, சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப்பத்திரத்தை அமைச்சரவை மூன்றாவது தடவையாக நேற்று முன்தினம் நிராகரித்துள்ளது.

இந்த அமைச்சரவைப் பத்திரத்தை, மீள்குடியேற்ற, புனர் வாழ்வு மற்றும் வடமாகாண அபிவிருத்தி, இந்து கலாசார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் செவ்வாயன்று அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைத்திருந்தார்.

கடந்த இரண்டு வாரங்களாக அமைச்சரவையில் இந்தப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டபோது ஜனாதிபதியும், அமைச்சர்களும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தமையால், நிறுத்தி வைக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் மீண்டும் இந்த அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டபோது, அமைச்சர்கள் தொடர்ந்து எதிர்ப்பை வெளியிட்டனர்.

இந்த அமைச்சரவைப் பத்திரம், போரினால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு, குறிப்பாக, பொதுமக்கள், வழிபாட்டு இடங்கள் மற்றும் போரில் இறந்த விடுதலைப் புலிகளின் குடும்பத்தினருக்கு இழப்பீடு வழங்கும் வகையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

பொதுமக்களுக்கும் வழிபாட்டு இடங்களுக்கும் இழப்பீடு வழங்குவதை தாம் எதிர்க்க வில்லை என்றும், ஆனால், போரில் இறந்த விடுதலைப் புலிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கு அனுமதிக்க முடியாது என்றும் அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

# கரவெட்டி ஆலயத்தில் குதிரை வாகனம் மாயம்



யாழ்ப்பாணம்,ஜுன் 21

யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியிலுள்ள ஆலயமொன்றிலிருந்து தெய்வ வாகனம் ஒன்று திருடப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

கரணவாய் வடக்கு, கரவெட்டியில் உள்ள சக்களாவத்தை ஞான வைரவர் ஆலயத்தின் குதிரை வாகனமே திங்கள் இரவு களவாடப்பட்டுள்ளது.

இதனைக் குறைந்தது 8 தொடக்கம் 10 பேர் வரை சேர்ந்தே காவ முடியும் என ஊரைச் சார்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர். மக்கள் எல்லோரும் ஆழ்ந்த உறக்கத்திலிருக்கும் அதிகாலை நேரத்திலேயே இந்தப் பாதகச் செயல் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குதிரை வாகனம் பாரமானதாகவும் விசாலமானதாகவும் விளங்குவதால் கன்டர் ரக வாகனம் ஒன்றைக் கொண்டுவந்தே அது ஏற்றப்பட்டுள்ளதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

பல வருடங்கள் பழமை வாய்ந்த வாகனமாக இது இருப்பதால் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகம் நிலவுகின்றது. யுத்த காலத்தில் யாழ்ப்பாணத்தின் தொன்மையான ஆலயங்கள் பலவற்றிலிருந்து களவாடப்பட்ட ஆலய வாகனங்களும் சிற்பங்களும் தென்னிலங்கையிலுள்ள உல்லாச விடுதிகள் பலவற்றில் அலங்காரமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

மேற்படி களவாடல்கள் தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.



# சீன பாதுகாப்புப் பல்கலையின் உயர்மட்டக் குழு இலங்கையில்

கொழும்பு,ஜுன் 21

சீனாவின் தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த உயர்மட்டக் குழுவொன்று இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளது.

சீனாவின் தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் உதவித் தலைவர் லெப்.ஜெனரல் ஷியாவோ தியன் லியாங் தலைமையிலான இந்தக் குழுவினர், நேற்று இலங்கைப் பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்னவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சில் நடந்த இந்தச் சந்திப்பின்போது, இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் இணைப்பதிகாரி மேஜர் ஜெனரல் ரணவக்கவும் கலந்து கொண்டார்.

# சிறப்புச் சலுகைகள் எவையுமே சிறையில் ஞானசாரருக்கு இல்லை!

## சிறைச்சாலை வட்டாரங்கள் திட்டவட்டம்

கொழும்பு,ஜுன் 21

வண. ஞானசார தேரருக்கு வெலிக்கடை சிறைச்சாலையில் தனியான சலுகைகள் வழங்கப்படமாட்டா என்றும், ஏற்கனவே தண்டனை அனுபவிக்கும் 15 பௌத்த பிக்குகளைப் போன்றே அவரும் சாதாரண கைதியாகத் தான் நடத்தப்படுவார் என்றும் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஞானசார தேரர் காவி உடையுடன் சிறைத்தண்டனை அனுபவிக்க இடமளிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கைகள் விடுக்கப்பட்டபோதும், அவை நிராகரிக்கப்பட்டுள்ளன.

அவருக்கு கைதிகள் வழக்கமாக அணியும் அரைக்காற் சட்டையே வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை, ஏற்கனவே, 18 பௌத்த, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மத குருமார் சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்து வருகின்றனர் என்றும் சிறைச்சாலை ஆணையாளர் தகவல் வெளியிட்டுள்ளார்.



இவர்களில் 15 பேர் பௌத்த பிக்குகள். ஆறு மாதங்கள் தொடக்கம் 7 ஆண்டுகள் வரை இவர்களுக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அரைக் காற்கட்டையுடன் கூடிய சிறைச்சாலை உடையே அணிந்திருக்கின்றனர்.

இவர்கள் தவிர, மேலும் 10 பௌத்த பிக்குகள் பல்வேறு குற்றச்சாட்டுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதகுருமார் தலா ஒவ்வொருவரும் சிறைத்தண்டனையை அனுபவிக்கின்றனர்.

கொலை, வல்லுறவு, கொள்ளை, வன்முறை மற்றும் அரசுக்கு எதிராக சதி செய்தல் ஆகிய குற்றச்சாட்டுகளில் இவர்கள் தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

இவர்களில் இந்து மதகுரு, சந்திரிகா குமாரதுங்க கொலை முயற்சி வழக்கில் தண்டனையை அனுபவித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)




# இசை சிறந்த தோழன்

# பிடித்த பாடலை கேட்டு ரசித்தால் கவலை குறையும்

இன்று உலக இசை தினம் கொண்டாடப்படுகின்றது. நாடு, மொழிகளுக்கு அப்பாற்பட்டது இசை. இசையை வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாது மற்றும் அமைதியாகவும் இருந்திட முடியாது' என இசை குறித்து மறைந்த பிரெஞ்ச் கவிஞர் விக்டர் ஹியூகோ குறிப்பிட்டுள்ளார்.

இசை இல்லாமல் வாழ முடியாது. இசை ஒரு கலை. இசைக்கு மயங்காதோர் உலகில் எவரும் இல்லை.

இசை நமது எண்ணம், செயல்கள் மற்றும் நினைவுகள் ஆகியவை அடங்கிய உணர்வுபூர்வமானது.

பெரும்பாலானவர்களின் கவலையை தீர்க்கும் மருந்தாகவும், சிறந்த பொழுது போக்கு அம்சமாகவும் இசை திகழ்கிறது. இசையில் வரும் தலைமுறையினருக்கு ஆர்வத்தை அளிக்கவும், இசைத்துறையில் சாதனை படைத்தவர்களை பாராட்டும் விதத்திலும் ஜூன் 21ஆம் திகதி உலக இசை தினம் கொண்டாடப்படுகிறது. இந்தியா, ஆஸ்திரேலியா, பிரிட்டன், சீனா உள்ளிட்ட 110க்கும் மேற்பட்ட நாடுகளில் கொண்டாடப்படுகிறது.

இசைக்கும் மனதுக்கும் உடலுக்கும் உள்ள தொடர்பை நன்கு புரிந்து கொண்டதால் தான் ஆதிகாலத்திலிருந்தே இசையை ஒரு மருத்துவ முறையாக மக்கள் பின்பற்றி வந்தார்கள். ஆனால் நவீன விஞ்ஞானத்தின் அறிவும் ஆராய்ச்சியும் அதை ஏற்கத் தயக்கம் காட்டி வந்தன.

இசையை விரும்பாத மனிதன் இருக்க முடியாது. சிலர் பதற்றம் ஏற்பட்டால் இசையைக் கேட்டு சாந்தமாவார்கள். சிலர் கவலையாக இருந்தால் தங்களுக்கு பிடித்த பாடல்களை கேட்பார்கள்.

இப்படி இன்பம், துன்பம் என்று அனைத்து தருணங்களிலும் மனித வாழ்வில் இசை என்பது பிரிக்க முடியாத ஒன்றாகிவிட்டது. இசை சிறந்த தோழன்,

> உடலின் அதிர்வுகளை கடத்தக் கூடிய நரம்பு மண்டலத்தை சீர்படுத்துவதில் இசை பெரும் பங்கு வகிக்கிறது. மெலடோனின் என்பது மூளையில் சுரக்கும் ஒரு இரசாயனப்பொருள். நல்ல இசையைக் கேட்கும் போது மெலடோனின் அதிக அளவில் சுரப்பதால் மன அழுத்தம், மன இறுக்கம், கோபம், எளிதில் உணர்ச்சி வயப்படுதல் போன்ற பல நிலைகளைக் கட்டுப்படுத்தும் சக்தி இந்த மெலடோனுக்கு உண்டு.

வலி நிவாரணி, அழகான உணர்வு, தனிமையை விரட்டும் கருவி என்று ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கருத்து உள்ளது. கவலையை பிறரிடம் பகிர்ந்து கொண்டால் அது குறையும் என்றும், அதே மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டால் அது அதிகரிக்கும் என்றும் கூறுவார்கள்.

அப்படித்தான் இசையும். நீங்கள் கவலையாக இருக்கையில் உங்களுக்கு பிடித்த பாடல்களை கேட்டால் கவலை குறையும்.

அதே சமயம் மகிழ்ச்சியாக இருக்கையில் இசையைக் கேட்டால் அது அதிகரிக்கும்.

### இசைகள் பலவிதம்

பழங்கால இசை, இடைக்கால இசை, ஐரோப்பிய கிளாசிக்கல் இசை, கிளாசிக்கல் (இலக்கிய) இசை, கற்பனை இசை மற்றும் நவீன இசை என இசையின் பரிமாணம் உருவாகியது. உலகில் ஒவ்வொரு நாடும் தனது கலாசாரத் துக்கு ஏற்ற வாறு பலவகையான இசைகளை இசைக்கின்றனர். ராக் மியூசிக், சோல் மியூசிக், பொப் மியூசிக், டிஸ்கோ, போக், சிம்பொனி உள்ளிட்ட இசைகள் உலகளவில் உள்ளன.

இந்தியாவில் பெரும்பாலும் இரு விதமான இசைகள் தான் பின்பற்றப் படுகிறது. ஒன்று வட இந்தியாவின் இந் துஸ்தானி இசை, மற்றொன்று தென்னிந்தியாவின் கர்நாடக இசை. இசை என்பது பொழுதுபோக்குக்கு அப்பாற்பட்டு சிறந்த வழிகாட்டியாகவும் உள்ளது.

### இசை மருத்துவம்

இசைச்சிகிச்சை (music therapy) எனப்படும் புதிய மருத்துவப் பிரிவு பல பரிமாணங்களில் உருவாகிக் கொண்டிருக்கின்றன. இரவில் படுக்கைக்குச் செல்லும் போது மெல்லிய நிதானமான இசை ஒருவரை அமைதியான ஆழ்ந்த உறக்கத்திற்கு கொண்டு செல்வதுடன் அவ

ருடைய ஞாபக சக்தியையும் அதிகரிக்கச் செய்வதாக ஆய்வுகள் கூறுகின்றன.

இசை அலைகள் நரம்பியல் மருத்துவர்கள் சந்தேகத்திற்கு இடமில்லாமல் மூளையின் கூறுகளை இசை சமப்படுத்துவதோடு மூளையின் அலைகளின் லயத்தையும் மாற்றியமைக்க வல்லது என உறுதிப்படுத்துகிறார்கள்.

மூளையின் மின் அலைகளை அவற்றின் வேகத்திற்கேற்ப நான்கு வகையாக வகுத்திருக்கிறார்கள். நாம் சுறுசுறுப்பாக

### அமிர்தவர்சினி ராகத்தை இசைத்தால் மழை பொழியும்



வேலை செய்கின்ற நிலை. (பீற்றா அலைகள்) உயர்ந்த அறிவுநிலையும் அமைதியும் காக்கும் நிலை. (அல்ஃபா அலைகள்) தியான நிலையம் படைப்பாற்றலையும் உறக்கத்தையும் தூண்டும் நிலை (தீற்றா அலைகள்) ஆழ்ந்த தியான நிலை ஆழ்ந்த உறக்கம் மற்றும் சமாதி நிலை. (டெல்டா அலைகள்) மூளையின் மின்னலைகளை ஒரு

நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாற்றும் சக்தி இசைக்கு உள்ளது என்பது தான் ஆராய்ச்சிகளின் முடிவு.

உடலின் அதிர்வுகளை கடத்தக் கூடிய நரம்பு மண்டலத்தை சீர்படுத்துவதில் இசை பெரும் பங்கு வகிக்கிறது. மெலடோனின் என்பது மூளையில் சுரக்கும் ஒரு இரசாயனப்பொருள். நல்ல இசையைக் கேட்கும்போது மெலடோனின் அதிக அளவில் சுரப்பதால் மன அழுத்தம், மன இறுக்கம், கோபம், எளிதில் உணர்ச்சி வயப்படுதல் போன்ற பல நிலைகளைக் கட்டுப்படுத்தும் சக்தி இந்த மெலடோனுக்கு உண்டு.

ஆல்சீமர் நோய் எனப்படும் அறிவுத்திறன் வீழ்ச்சியினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு மொஸார்ட்டின் பியானோ இசை ஒலி நாடாக்களை தினசரி ஒரு மணிநேரம் கேட்க வைத்தனர்.

பின்னர் நோயாளிகளின் அறிவுத்திறன், நினைவாற்றல் ஆகியவற்றை பரிசோதித்தபோது 25 முதல் 50 சதவீதம் வரை அதிக மதிப்பெண் பெறுவது கண்டறியப்பட்டது.

மத்தளம், டிரம்ஸ் போன்ற தோல் கருவிகள் மனக்கிளர்ச்சியை அதிகப்படுத்தி தசைநார்களை தளரச் செய்கிறது. போர்க்களங்களிலும், தீமிதி சடங்குகளிலும், அலகு குத்திக் கொள்ளும்போதும் கொட்டுவாத்தியங்கள், தாரை, தம்பட்டை போன்ற தோல் கருவிகளைப் பயன்படுத்துகின்றமையால், மனக்கிளர்ச்சி ஏற்பட்டு உடலுக்கும் உள்ளத்திற்கும் ஒரு புதிய வேகம் உண்டாகிறது.

### ஒற்றைத் தலைவலிக்கு வயலின் இசை மாமருந்து

ஒற்றைத் தலைவலிக்கு வயலின் ஒரு சிறந்த மாமருந்தாக பயன்படுகிறது என்பது பலரும் அறியாத உண்மையாகும். நமது நாட்டில் கூட அமிர்தவர்சினி ராகத்தை இசைத்தால் மழை வரும் என்பது நம் முன்னோர்களின் நீண்ட கால நம்பிக்கையாக உள்ளது.

ரத்த அழுத்தத்திற்கு 'நீலாம்பரி', மன அழுத்தத் திற்கு 'லதாங்கி', சர்வரோக நிவாரணியாக 'ஸ்வேதம்பரி' இரவு தூங்க முடியாமல் எதேனும் வயிறு கோளாறு ஏற்பட்டு கைவசம் antacid ஏதும் இல்லாத பட்சத்தில் ஹிந்தோளகிராக பாடலை பாடுங்கள்.

கல்யாணி, ஹம்சவத்னி இராகங்களில் அமைந்த இசையை அல்லது மொஸார்டின் ஒரு சொனாட்டா அல்லது கொன்சர்டோ இசையை ஒலிக்கவிடுவதன் மூலம் சீரான மன ஓட்டமின்றி மனதை அலைய விட்டுக் கொண்டிருக்கும் ஒரு நபருடைய மனமானது களேபரம் அடங்கி சாந்தமடைவதற்கு அல்லது சோம்பல் நீங்கி சுறுசுறுப்பு அடைவதற்கு ஏதுவாகிறது என அவதானிக்கப்பட்டுள்ளது.

இசை ஒரு வரையறைக்குள் இருக்க வேண்டும். கலாசாரத்தை சீரழிக்கும் இசை உருவாவதை துவக்கத்திலேயே தடுக்க வேண்டும். பொழுதுபோக்கு அம்சமாகவும் அதே நேரத்தில் வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கும் ஏற்ற வகையிலும் இசை இருக்க வேண்டும்.









## யாழ் இந்துவில் பாடசாலை தோட்ட அறுவடை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, செயன்முறைத் தொழினுட்ப மன்றத்தினரால் கல்லூரியில் செய்கை செய்யப்பட்டு வரும் பாடசாலை தோட்டத்தில் அறுவடை நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

மன்றத்தினரால் கத்தரி, வெண்டி, மிளகாய், தக்காளி மற்றும் மூலிகைத்தாவரங்கள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அறுவடை நிகழ்வில் கல்லூரி அதிபர் சதா நிமலன், மன்றப் பொறுப்பாசிரியர் க. சுவாமிநாதன் மற்றும் மன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (இ)

யாழ் நாவற்குழி தமிழர் மண்ணில்

# சிவபூமி திருவாசக அரண்மனை

எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி
(ஆசிரியர்)



சிவபூமி திருவாசக அரண்மனைத் திறப்பு விழா எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறும். யாழ்ப்பாண நகரின் நுழைவாயிலாக அமைந்த நாவற்குழி மண்ணில் இந்த திருவாசக அரண்மனை அமையப் பெற்றிருக்கின்றது. அறுநூற்று ஐம்பத்தெட்டு திருவாசகப் பாடல்கள் கருங்கல்லில் பதிப்பித்து இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

இந்த அரண்மனையின் மத்தியிலே தெட்சணாமூர்த்திக்கு அழகிய திருக்கோயில் அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்த நல்ல கைங்காரியத்தை ஈழத்தில் ஆன்மீக மற்றும் சமூகப் பணிகளை ஆற்றி வரும் சிவபூமி அறக்கட்டளை மேற்கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

சிவபெருமானுக்கு இருபத்தைந்து மூர்த்தங்கள் கூறப்படுகின்றன. இலிங்கோற்பவ மூர்த்தி, சுகாசனமூர்த்தி, உமாசகித மூர்த்தி, கல்யாண சுந்தர மூர்த்தி, அர்த்தநாரீச்சரமூர்த்தி, தெட்சணாமூர்த்தி, சோமஸ்கந்த மூர்த்தி, சங்கரப் பிரதான மூர்த்தி, திரிமூர்த்தி, நடராசமூர்த்தி என்பன இவற்றுள் சில. இம் மூர்த்திகளினுள்ளே தெட்சணாமூர்த்தி ஞானத்தை அருளும் குருவாகச் சிவாலயங்களிலே தெற்குத் திசையிலே அமர்ந்தருளுவார்.



இந்தத் திருவாசக அரண்மனையின் மத்தியில் தெட்சணாமூர்த்தியை மூல மூர்த்தியாகக் கொண்ட திருக்கோவில் ஒன்று உருவாக்கம் பெற்றுள்ளமை இங்கு சிறப்பம்சமாகும். இது இலங்கையில் முதன்முதலாக தென்திசை நோக்கிய தெட்சணாமூர்த்தியை மூலமூர்த்தியாகக் கொண்ட தனிக் கோயிலாகவும் அமைந்திருப்பது சிறப்புக்குரியதாகும்.

அதேவேளையில் கருங்கல்லில் வடிவமைக்கப்பட்ட ஒவ்வொன்றும் சுமார் இரண்டரைஅடி உயரமான நூற்றிஎட்டி சிவலிங்க விக்கிரகங்களும் இங்கு அமைக்கப்பட்டிருக்கின்றமை சிறப்பு அம்சமாகக் கருதப்படுகின்றது.

இந்த சிவலிங்கங்களுக்கு அடியார்கள் தங்கள் கரங்களால் அபிஷேகம் செய்வதற்கு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் நுழைவாயிலுக்கு அண்மையாக கருங்கல்லில் உருவாக்கப்பட்ட இருபத்தொரு அடி உயரமான இரதத்தில் சிவனும் மாணிக்கவாசகரும் எழுந்தருளியிருக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

திருவாசக அரண்மனையிலே திருவாசக ஆராய்ச்சி நூல் நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. திருவாசக ஆராய்ச்சியில் ஈடுபடுபவர்கள் தங்குவதற்கு வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.


நாளை 22 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 8 மணிக்கு இங்கு பூர்வாங்க கிரியைகள் ஆரம்பமாகின்றன. நண்பகல் 12 மணி முதல் சிவதெட்சணாமூர்த்தி திருக்கோயில் மூலமூர்த்திக்கும் அரண்மனை பிரகாரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் நூற்றிஎட்டு சிவலிங்கங்களுக்கும் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். மறுநாள் நாளை மறுதினம் சனிக்கிழமை நண் பகல் 22 மணி முதல் ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணி வரை அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்துவதற்குரிய காலமாகும்.

24 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு திருவாசக அரண்மனைத் திறப்புவிழா சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும் சமய, சமூக தொண்டருமான செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறும். இத் திருப்பணியை நிறைவேற்ற நிலத்தையும், நிதியையும் வழங்கிய பரோபகாரி, வைத் ய நிபுணர்களான வை.மனோமோகன் – சிவகௌரி தம்பதிகள் திருவாசக அரண்மனையைத் திறந்து வைக்க இருக்கிறார்கள்.

கருங்கல்லில் உருவாக்கப்பட்ட இரதத்தினை மனிதநேயம் – கொழும்பு அமைப்பின் தலைவர் அபிராமி கயிலாசபிள்ளை திறந்து வைக்கிறார். அருளாசி உரைகளை ஆன்மீகப் பெரியவர்கள் வழங்கி சிறப்புரையை "திருவாசகம்" எனும் தலைப்பில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் ஆற்றுவார். அண்ணாமலைப் பல்கலைக்கழக (சிதம்பரம்) பேராசிரியர் தி.பாலச்சந்தர் தேசிகர் வழங்கும் திருவாசக இசை விருந்தும் அன்றைய தினம் இடம்பெற இருக்கின்றது.

எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட் கிழமை காலை 9.40 – 10.45 மணி வரையிலான சிம்ம லக்ன சுபவேளையில் சிவதெட்சணா மூர்த்தி திருக்கோயில் மகா கும்பாபிஷேகப் பெருவிழா கிரியைகளை சித்தன்கேணி வீணாகான குருபீட பீடாதிபதி சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள் தலைமையில் இடம்பெறும். அருளாசி உரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்குவார். தொடர்ந்து விசேட பூசை அன்னதானம் என்பன இடம்பெற இருக்கின்றன.

இலங்கையில் முதன்முதலாக திருவாசகப்பாடல்கள் முழுவதும் கருங்கல்லில் பதிக்கப்பட்டிருக்கின்றமை, முதன்முதலாக 108 சிவலிங்கங்கள் ஒரேயிடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பது, தென் திசை நோக்கிய சிவதெட்சணாமூர்த்தியை மூல மூர்த்தியாக கொண்ட திருக்கோயில் அமைந்திருப்பது முதலான சிறப்புகள் அடங்கியுள்ள நாவற்குழி திருவாசக அரண்மனை திறப்புவிழாவுக்கும் அதனையொட்டி நடைபெறுகின்ற விசேட நிகழ்வுகளுக்கும் அடியவர்கள் வருகை தந்து இந்த வரலாற்றுப் பெருவிழாவில் கலந்து சிறப்பித்து திருவருளைப் பெற்றேகுவார்களாக!





**ஞாயிறன்று மாலைப்பொழுதினில் கோலாகலமான திறப்பு விழா நிகழ்வு**

- ★ நாளை வெள்ளிக்கிழமை கிரியைகள் ஆரம்பம்
- ★ சனி,ஞாயிறு எண்ணெய்காப்பு (நண்பகல் 12 மணி முதல் மறுநாள் நண்பகல் 12 மணி வரை)
- ★ திறப்புவிழா ஞாயிறன்று மாலை 4 மணிக்கு
- ★ திங்களன்று மகா கும்பாபிஷேக பெருவிழா







# கல்விக் கதிர் வெளியீடு 02

தரம்-5

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்

பிரபல ஆசிரியர் வே.அன்பழகன்

## பகுதி – I

17. சித்திராவை விட கமலா உயரம் கூடியவர் . நிலாவை விடச் சித்திரா உயரம் கூடியவர். இம்மூவரிலும் உயரம் மிகக் குறைந்தவர் யார்?
1) சித்திரா 2) கமலா 3) நிலா

18. 
இவ்வுருவில் காணக் கூடிய செவ்வகங்களின் எண்ணிக்கை
1) 1ஆகும் 2) 2 ஆகும் 3) 3 ஆகும்

19. நாளை மறு நாள் திகதி 10 எனின் , நேற்று முன்தினம் என்ன திகதியாகும்?
1) 5 2) 7 3) 6

**★ 20 ஆம் 21 ஆம் வினாக்களில் சரியான கருத்தை வெளிப்படுத்தும் வாக்கியத்தை தெரிவு செய்க**

20. 1). காந்தியடிகள் பிறருக்காக வாழாது தமக்கென வாழ்ந்த உத்தமர்களுள் ஒருவர்.
2) காந்தியடிகள் தமக்கெனவாழாது பிறருக்காக வாழ்ந்த உத்தமர்களுள் ஒருவர்.
3) காந்தியடிகள் உத்தமர்களுள் ஒருவராக பிறருக்காக வாழாதிருந்தார்.





21. 1.அபிராமி உண்மை பேசியதால் எல்லோரும் அவளைப் போற்றினார்கள்.
2.அபிராமி பொய் பேசியதால் எல்லோரும் அவளைப் போற்றினார்கள்.
3.அபிராமி உண்மை பேசியதால் எல்லோரும் அவளைத் தூற்றினார்கள்.





**★ 22 ஆம் 23 ஆம் வினாக்களில் A,B எனும் கூண்டுகளுக்குப் பொருத்தமான எண்களை தந்துள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்க.**

22.
```
    5 4 3
+   4 A 2
    -----
    9 B 5
```
1) A = 3 B =17
2) A = 3 B = 1
3) A = 2 B = 6

23.
```
    8 9 7
-   3 5 A
    -----
    5 4 B
```
1) A = 2 B =9
2) A = 1 B = 6
3) A = 3 B = 14

**★ 24 ஆம் 25 ஆம் வினாக்களில் முதலில் இரண்டு உருக்களையும் ஒன்றாகச் சேர்ப்பதன் மூலம் செய்து கொள்ளத்தக்க தனி உருவைத் தந்துள்ள மூன்று விடைகளிலிருந்து தெரிவு செய்க**

24. 
1) 
2) 
3) 





25. 
1) 
2) 
3) 



**★ 26 ஆம் 27 ஆம் வினாக்களில் ஏதோ ஒரு நிகழ்ச்சியின் நான்கு சந்தர்ப்பங்கள் ஒழுங்கு முறையாகத் தரப்பட்டுள்ளன. அதன்படி அடுத்து வரவேண்டிய சொல்லைத் தந்துள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்க.**

26. உழுதல் ⟶ நெல் விதைத்தல் ⟶ பராமரித்தல் ⟶ அருவிவெட்டுதல் ⟶ ................
1) அரிசியை சாக்குகளில் போடுதல் 2) சூடு மிதித்தல் 3) நெல் அவித்தல்

27. காணி ⟶ அத்திவாரம் வெட்டுதல் ⟶ கருங்கல்லால் அத்திவாரமிடல் ⟶ சுவர் கட்டுதல் ⟶ .............
1) சுவருக்குச் சாந்து பூசுதல் 2) ஓடு போடுதல் 3) கூரை அடித்தல்

**★ தரப்பட்ட உருக்களில் வேறுப்பட்ட உருவைத் தெரிவு செய்க.**

28. 1) 
2) 
3) 
4) 

29. 1) 
2) 
3) 
4) 

**★ பின்வரும் கோவையைப் பார்க்க.**
**இங்கு = குறியீடானது சமனைக் கருதுகின்றது. நியம கணிதச் செய்கைகளுக்காக *, # என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.**

**2 * 4 = 5 # 3**

30. * என்ற குறியீடானது எதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது?
1) கூட்டல் 2) கழித்தல் 3) பெருக்கல்

31. # என்ற குறியீடானது எதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது?
1) கூட்டல் 2) கழித்தல் 3) வகுத்தல்

**★ வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

32. ஞாயிற்றுக்கிழமை , செவ்வாய்க்கிழமை , வியாழக்கிழமை, சனிக்கிழமை ..........................
1) செவ்வாய்க்கிழமை , வியாழக்கிழமை 2) திங்கட்கிழமை , புதன்கிழமை
3) ஞாயிற்றுக்கிழமை , திங்கட்கிழமை

33. | 2 | 4 | 6 | | 3 | 5 | 7 | | 4 | 6 | 8 | ..............................

| 5 | 6 | 7 | | 5 | 7 | 9 | | 6 | 8 | 9 |

# நேரம் தவறாமை



சுடரொளி ஒரு பள்ளி பருவ மாணவன். ஒரு நாள் கா... கா.... என்று கத்திக்கொண்டு ஒருக் காகம் பறந்து வந்தது அவன் வீட்டின் அருகிலுள்ள மரக்கிளையில் அமர்ந்தது. சுடரொளி அந்தக் காகத்தைப் பிடிக்க ஆசை, பிடிக்க ஓடினான். உடனே அது பறந்து சென்றது. சுடரொளி திரும்பி வந்து காத்திருந்தான்.

அந்தக் காகம் மீண்டும் அங்கு வந்து அங்கும் இங்கும் நடந்தது. சுடரொளி தான் தின்று கொண்டிருந்த வடையைப் பிய்த்துக் காகத்துக்குப் போட்டான். காகம் வேகமாக ஓடி வந்தது. வடையைக் கொத்திக் கொண்டு பறந்தோடியது. சுடரொளிக்கு அந்தக் காகத்தைப் பிடிக்க வேண்டும் என்ற ஆசை எழுந்தது.

வெகுநேரம் காத்திருந்தான். அந்தக் காகம் மீண்டும் வரவேயில்லை. இரண்டாம் நாள் அந்த இடத்திற்கு, அதே நேரத்திற்கு அந்தக் காகம் வந்தது. அங்கும் இங்கும் நடந்தது. இன்று அந்தக் காகம் கைக்கு எட்டும் தொலைவிற்குள் நடந்து வந்தது. சுடரொளி தன்னிடம் இருந்த நிலக்கடலையை காகத்தின் முன் வீசினான். காகம் தலையைச் சாய்த்துச் சாய்த்துப் பார்த்துக் கொண்டே ஒவ்வொரு கடலையாகக் கொத்தித் தின்றது.

சுடரொளி அருகில் சென்றதும் உடனே பறந்தோடியது. மூன்றாம் நாளும் அந்தக் காகம் அந்த இடத்துக்கு, அதே நேரத்துக்கு வந்தது. இன்று அச்சப்படாமல் காகம் சுடரொளியின் அருகில் வந்தது. சுடரொளியின் கையை ஆவலோடு பார்த்தது. சுடரொளி வீட்டிற்குள் சென்று அரிசியை எடுத்து வந்து போட்டான். காகம் பொறுமையாக ஒவ்வொரு அரிசியாகப் பொறுக்கித் தின்றது.

சுடரொளி காகத்தைப் பிடிக்க எழுந்தான். காகம் பறந்தோடியது. ஒவ்வொரு நாளும் காகம் சரியான நேரத்துக்கு வந்தது. சுடரொளியும் காகமும் நண்பர்களானார்கள். சுடரொளி சொல்லுவதைக் கேட்டுக் காகம் புரிந்து கொண்டது போலத் தலையை ஆட்டும். சரியான நேரத்துக்கு வரும் காகத்தைக் கண்டு சுடரொளி வியந்தான். காகத்தால் எப்படி முடிகிறது? மணிக்கூடு இல்லை, பேசத் தெரியாத, எழுதத் தெரியாத,ஆனால் சரியான நேரத்துக்கு அந்தக் காகம் எப்படி வந்து போகிறது. சுடரொளி வியந்தான்.

தனது நண்பனான காகத்தைப் போல, தானும் சரியான நேரத்துக்குப் பள்ளிக்குச் செல்வது, அனைத்து வேலைகளையும் சரியான நேரத்தில் தொடங்குவது என முடிவு எடுத்துக் கொண்டான்.சரியான நேரத்துக்குப் பள்ளிக்கு வந்து அனைத்தையும் முறையாகச் செய்யும் சுடரொளியை அனைவரும் பாராட்டினார்கள்.



# மக்களின் நலன்களை முன்னிறுத்தியே அனைத்து செயற்பாடுகளும் முன்னெடுப்பு



வேலணை பிரதேச சபை அமர்வின்போது தவிசாளர்

வேலணை, ஜூன் 21

மக்களின் நலன்களை முன்னிறுத்தியதாகவே எமது செயற்பாடுகள் ஒவ்வொன்றும் முன்னெடுக்கப்படுகின்றன. அந்த வகையில் நாம் முன்னெடுத்துச் செல்லும் ஒவ்வொரு செயற்றிட்டமும் மக்களது அபிலாசைகளை நிறைவுசெய்வதாகவே அமையும் என வேலணை பிரதேச தவிசாளர் நமசிவாயம் கரணாகரகுருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வேலணை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு செவ்வாயன்று வேலணை பிரதேச சபையின் பொது நோக்கு மண்டபத்தில் தவிசாளர் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது புங்குடுதீவு பிரதேசத்திற்கு குடிதண்ணீர் வழங்கலை தனியார் பவுஸர் உரிமையாளர்களுக்கும் பகிர்ந்தளிப்பது தொடர்பாக முன்மொழிவு சபையின் விவாதிதத்திற்கு கொண்டு வரப்பட்டது. இது குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே தவிசாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்–

புங்குடுதீவு பிரதேசத்திற்கு நீர் வழங்குவது தொடர்பில் சபை உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு அமைவாக நாளாந்தம் நான்கு தனியார் பவுஸர்களுக்கு அனுமதி வழங்கலாம் என கருத்து முன்வைக்கப் பட்டது. ஆனால் இதற்கு சபையின் சில உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டமையால் காரசாரமான விவாதம் நடை பெற்றது.

பிரதேசசபையின் முன்னைய அமர்வில் தனியார் பவுஸர்களுக்கு அனுமதி வழங்க முடியாது என தீர்மானிக்கப்பட்டிருந்ததற்கு அமைவாக புங்குடுதீவு பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு பிரதேச சபையின் பவுஸர்கள் மூலமே நீர் வழங்க முடியும் என்றும் அதுவும் புங்குடுதீவு மக்களின் வேண்டுதலுக்கு அமைவாக அப்பகுதிக்கு சர்வோதயத்தால் வழங்கப்படும் வறட்சி நீருக்கு மேலதிகமாக மக்களுக்கு தேவைப்படும் குடிதண்ணீரைக் கோரிக்கைக்கு அமைய பிரதேசசபையின் குடிதண்ணீர் பவுஸர்கள் மூலம் வழங்க ஏற்பாடு செய்ய முடியும் என சபையில் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் எமது பிரதேசம் குடிதண்ணீருக் காக கடும் பிரச்சினையை எதிர்கொண்டு வரும் பிரதேசமாகும். அந்தவகையில் அதை மக்கள் நலன்களில் நின்று எதிர் கொள்ள நாம் முடியுமான முயற்சிகளை முன்னெடுத்துள்ளோம். ஆனாலும் அதிலும் சில சிக்கல்கள் இருக்கின்றன. அவற்றை நிறைவு செய்வதற்கு துறைசார்ந்தவர்களூடாக பல வகைகளிலும் நாம் முயற்சிகளை முன்னெடுக்கவுள்ளோம்.

அத்துடன் கடந்த காலங்களில் எமது கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக இருந்த காரணத்தால் இவ்வாறான பிரச்சினைகள் எழுந்த போதெல்லாம் அவற்றை இலகுவான முறையில் மக்கள் நலன்களிலிருந்து நிறைவேற்றிக் கொடுத்திருந்தோம். ஆனால் இன்று அரசியல் மாற்றங்கள் காரணமாக அவ்வாறான நிலைமைகள் குறைவாகவே உள்ளன.

இருந்தும் பிரதேச சபையால் முன் னெடுக்க முடியாத சில விடயங்களை எமது கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு சென்று மக்கள் தேவைகளை நிறைவு செய்து கொடுக்க விரைவான ஏற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ

## மன்னாரில் அகழ்வுப் பணிகள் நீடிப்பு:

# புதிய இடங்களிலும் ஆங்காங்கே எலும்புக் கூடுகளின் எச்சங்கள்




மன்னார் சதொச விற்பனை நிலைய கட்டிட நிர்மான வளாகத்தில் மனித எலும்புக்கூடு தொடர்பாக அகழ்வு செய்யும் பணியில் அளவீடு செய்வதற்காக திட்ட மிட்ட இடங்களை அகழ்வு செய்யும் இடங்களில் எலும்புக் கூடுகள் எச்சங்கள் தொடர்ந்து தென்பட்டு வருகின்றன.

மன்னார் சதொச விற்பனை நிலைய கட்டட நிர்மான வேலையின்போது இவ் வருடம் மார்ச் மாதம் கண்டு பிடிக்கப் பட்ட மனித எச்சங்களைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் 16 வது நாளாகவும் அகழ்வுப் பணிகள் நடந்தன.


நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அகழ்வு பணியின்போது ஒரு பகுதினர் ஏற்கனவே குழிக்குள் கண்டுபிடிக்கப் பட்ட மனித எலும்புக்கூடுகளை அதற்குள் இருந்தவாறு துப்புரவு செய்த வண்ணம் காணப்பட்டபோதும் பணியில் ஈடுபட்டு வரும் மற்றொரு பகுதினர் அகழ்வு செய்வதற்காக அளவீடு செய்யப்பட்ட இடங்களை புதிதாக அகழ்வு செய்யும் பணியில் ஈடுபட்டனர்.

புதிதாக அகழ்வு செய்யும் இடங்களிலும் மனித எலும்புக் கூடுகள் எச்சங்கள் புதிது புதிதாக தென்படுவதையும் காணக் கூடியதாகவுள்ளன.

மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.என்.ஐ.பிரபாகரன் முன்னிலையில் நடைபெறும் இவ் அகழ்வு பணியானது சட்டவைத்திய அதிகாரி டபிள்யூ.ஆர்.ஏ.எஸ்.ராஜபக்ஷ, தலைமையில் களனி பல்கலைக்கழக பேராசிரியர் ராஜ சோமதேவ, தடயவியல் நிபுணத்துவ பொலிஸார் ஆகியோர் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுடன் நிள அளவையாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பிலுள்ள பிரதிநிதிகள் இங்கு சமுகமளித்து வருகின்றனர்.

(இ – 112)







புதிதாக அமைக்கப்பட்ட மண்டைதீவு–அல்லைப்பிட்டி பாலம் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனால் நேற்று புதன்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டுள்து.

ஆயிரம் கிராமிய பாலங்கள் திட்டத்தின் கீழ் வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் 3 கோடியே 20 லட்சம் ரூபா செலவில் இப்பாலம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக் கலந்து கொண்டு பாலத்தை நாடாவெட்டித் திறந்து வைத்ததுடன் பெயர்ப் பலகையையும் திரை நீக்கம் செய்து வைத்து விசேட உரை யொன்றையும் ஆற்றியிருந்தார்.

இந் நிகழ்வில் மாகாண கல்வி அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரன், மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் உள்ளிட்ட மாகாண சபை உறுப்பினர்களான விந்தன் கனகரட்ணம், பா. கஜதீபன், ஆர்.ஜெயசேகரம் மற்றும் மாகாண பிரதம செயலாளர் பத்திநாதன், மதகுருமார்கள், பொது மக்கள், அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (இ

## வவுனியா பிரதேச செயலகத்தில்

# 20 வருடங்கள் இடமாற்றம் இன்றி; கடமைபுரியும் 16 ஊழியர்கள்!

வவுனியா பிரதேச செயலகத்தில் எந்தவித இடமாற்றங்களும் வழங்கப்படாது கடந்த 20 வருடங்களுக்கு மேலாக 16 உத்தியோகத்தர்கள் கடமையாற்றுவது தகவல் அறியும் சட்டம் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

வவுனியா பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் பதவிக் காலம் தொடர்பில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக கோரப்பட்ட நிலையில் தகவல் அதிகாரியால் வழங்கப்பட்ட தகவலின் மூலமே இவை தெரியவந்துள்ளது.

அந்த வகையில் வாழ்வின் எழுச்சி அபிவிருந்தி உத்தியோகத்தர்களான க.திருமலர்செல்வி (21 வருடம்), ச.சகீனா (20 வருடம்), தி.கீர்த்திசிங்கம் (20 வருடம்), சி.ஆனந்தகுமார் (21 வருடம்), நா.வசந்தகுமாரி (20 வருடம்), தி.கை லேஸ்வரன் (21 வருடம்), எம்.ஆர்.எம்.நவாஸ் (22 வருடம்), ஜே.ஏ.சி.மல்காந்தி (21 வருடம்), அ.ஜசிந்தா (21 வருடம்), மு.இரட்ணேஸ்வரி (20 வருடம்), த.குக னேஸ்வரி (21 வருடம்), கு.தனபாலன் (20 வருடம்), வாழ்வின் எழுச்சி முகாமையாளரான பா.ஜானகி (20 வருடம்), அலுவலகப் பணியாளரான ந.யோக ராசா (24 வருடம்), கிராம அலுவலர்க ளான க.கணேசலிங்கம் (23 வருடம்), பா.ஜெயபாலன் (23 வருடம்) ஆகிய 16 உத்தியோகத்தர்கள் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக எந்தவித இடமாற்றமும் வழங்கப்படாத நிலையில் வவுனியா பிரதேச செயலகத்தில் கடமையாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.

(இ 100)

# சீனா – அமெரிக்கா இடையே வெடித்தது வர்த்தகப் போர்!

## பல்லாயிரம் கோடி டொலருக்கு மாறி மாறி வரி விதிப்பு

சீனாவின் முறையற்ற' வர்த்தகக் கொள்கைகள் தொடர்ந்தால், அந்த நாட்டிலிருந்து இறக்குமதியாகும் 20,000 கோடி டொலர் (இலங்கைப் பணத்தில் ரூ.32 கோடி) மதிப்பிலான பொருள்கள் மீது கூடுதல் வரி விதிக்கப்படும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க அதிபர் மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சீனப் பொருள்கள் மீது அமெரிக்கா விதித்துள்ள கூடுதல் வரி விதிப்புகளுக்குப் பதிலடியாக அந்த நாடும் அமெரிக்கப் பொருள்கள் மீது வரி விதிப்பதாக அறிவித்துள்ளது.

அந்த அறிவிப்பை சீனா செயல்படுத்தினால், அந்த நாட்டிலிருந்து இறக்குமதியாகும் 20,000 கோடி டொலர் மதிப்பிலான பொருள்கள் மீது கூடுதலாக 10 சதவீத வரி விதிக்கப்படும் என்று அதிபர் மாளிகை தெரிவித்துள்ளது.

மேலும், இதுகுறித்து ட்ரம்ப் வெளியிட்டுள்ள அறிக்கையில், சீனா தனது முறையற்ற வர்த்தகக் கொள்கைகளைக் கைவிடச் செய்வதற்கான அதிரடி நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள் ளப்படும்" – என்றார்.

சீனாவுக்கு ஏற்றுமதி செய்யும் பொருள்களின் மதிப்பைவிட, அந்த நாட்டிடமிருந்து அமெரிக்கா இறக்குமதி செய்யும் பொருள்களின் மதிப்பு அதிகமாக இருப்பதால், அந்த வர்த்தகப் பற்றாக்குறையை சமாளிப்பதற்காக சீனப் பொருள்களுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்போவதாக கடந்த 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின்போது ட்ரம்ப் வாக்குறுதி அளித்திருந்தார்.

அதன்படி, சீனா உள்ளிட்ட நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் இரும்பு போன்ற உலோகப் பொருள்களுக்கு கூடுதல் இறக்குமதி வரி விதிக்கும் உத்தரவை அவர் பிறப்பித்தார்.

மேலும், சுமார் 6,000 கோடி



டொலர் (இலங்கை நாணயத்தில் சுமார் ரூ.10 லட்சம் கோடி) மதிப்புக்கு சீனப் பொருள்கள் மீது கூடுதல் வரி விதிக்கும் உத்தரவிலும் அவர் கையெழுத்திட்டார்.

இதற்குப் பதிலடியாக, 300 கோடி டொலர் (இலங்கை நாணயத்தில் சுமார் ஐம்பதாயிரம் கோடி ரூபா) மதிப்பு கொண்ட 128 வகை அமெரிக்க இறக்குமதி பொருள்கள் மீது கூடுதல் வரி விதிக்கப் போவதாக சீனாவும் அறிவித்தது.

இதன் காரணமாக, இரு நாடுகளுக்கும் இடையே வர்த்தகப் போர் வெடிக்கும் என்று அச்சம் எழுந்தது.

அதையடுத்து, வர்த்தகப் போரைத் தவிர்ப்பதற்காக, அமெரிக்கத் தலைநகர் வொஷிங்டனிலும், சீனத் தலை நகர் பெய்ஜிங்கிலும் இரு நாட்டு அதிகாரிகள் மாறி மாறி பேச்சு நடத்தினர்.

இதில், வேளாண்மை, எரிசக்தி போன்ற துறைகளில் வர்த்தகப் பரிவர்த்தனைகளை மேம்படுத்துவது குறித்து கருத்தொற்றுமை ஏற்பட்டது.

எனினும், இதுதொடர்பான இறுதி முடிவுகள் எடுக்கப்படாமல் இருந்து வந்தது.

இந்த நிலையில், சீனாவிலிருந்து இறக்குமதியாகும் 5,000 கோடி டொலர் மதிப்பிலான பொருள்களுக்கு கூடுதலாக 25 சதவீதம் வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்தார்.

சீனாவின் தொழில்நுட்பத் திருட்டு, முறையற்ற வணிகக் கொள்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் குறிப்பிட்ட பொருள்களுக்கு கூடுதல் வரி விதிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

அந்த அறிவிப்புக்குப் பதிலடியாக, அதே மதிப்பிலான அமெரிக்க இறக்குமதிப் பொருள்களுக்கு 25 சதவீதம் கூடுதல் வரி விதிக்கப்படும் என்று சீனா அறிவித்தது.

இந்தச் சூழலில், அமெரிக்கா தற்போது விடுத்துள்ள எச்சரிக்கையால் உலகின் இரு பொருளாதார சக்திகளான அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையே வர்த்தகப் போர் வெடிக்கும் என்ற அச்சம் அதிகரித்துள்ளது.

---

தாய்லாந்தில் மரண தண்டனை

## 9 ஆண்டுகளின் பின் நிறைவேற்றம்

பாங்கொக், ஜுன் 21

தாய்லாந்தில் 9 ஆண்டுகளுக்கு பிறகு முதன்முதலாக கொலைக் கைதிக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

தாய்லாந்து நாட்டில் கடைசியாக 2009 ஆம் ஆண்டில் போதைப் பொருள் கடத்தல்காரர்கள் 2 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. அதன் பின்னர் அங்கு யாருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்படவில்லை.

இந்த நிலையில் அங்கு 17 வயதான ஒரு சிறுவனை 2012ஆம் ஆண்டில் கொலை செய்த வழக்கில், தீராசக் லாங்ஜி வயது (26) என்ற வாலிபருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

அவருக்கு பாங்குவாங் மத்திய சிறையில் வைத்து கடந்த திங்கட்கிழமை விஷ ஊசி போட்டு, மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

அங்கு முதலில் துப்பாக்கியால் சுட்டுத்தான் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டு வந்தது. 2003ஆம் ஆண்டு முதல்தான் மரண தண்டனை கைதிகளுக்கு அமெரிக்காவை போன்று விஷ ஊசி போட்டு தண்டனையை நிறைவேற்றும் வழக்கம் வந்தது.

அந்த வகையில் விஷ ஊசி போட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட 7ஆவது கைதி என்ற பெயரை தீராசக் லாங்ஜி பெற்றார்.

ஆனால் இதை மனித உரிமை அமைப்பான சர்வதேச மன்னிப்புச் சபை கடுமையாக சாடி உள்ளது. வாழும் உரிமை மீதான மோசமான மீறல் இது. குற்றங்களை தடுக்க மரண தண்டனை ஓர் ஆயுதமாக பயன்படும் என்பது நிரூபிக்கப்படவில்லை. எனவே இனி யாருக்கேனும் மரண தண்டனை நிறைவேற்ற தாய்லாந்து அரசு எண்ணி இருந்தால் அதை உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று அந்த அமைப்பு கூறியது.

(உ)

---

# உலகில் 100 கோடி துப்பாக்கிகள்



### ஐ.நா. ஆய்வறிக்கையில் அதிர்ச்சித் தகவல்

நியூயோர்க், ஜுன் 21

உலகம் முழுவதும் சுமார் 100 கோடிக்கும் மேற்பட்ட துப்பாக்கிகள் உள்ளன என்று ஐ.நா. சபை ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. சபை சார்பில் பாதுகாப்புத் துறை நிபுணர் ஆரோன் கார்ப் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் இது குறித்து கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

கடந்த 2017 புள்ளிவிவரங்களின் படி உலகளாவிய அளவில் பாதுகாப்புப் படையினர் மற்றும் பொதுமக்களிடம் சுமார் 100 கோடிக்கும் அதிகமான துப்பாக்கிகள் உள்ளன. இதில் பொதுமக்களிடம் மட்டும் 85.7 கோடி துப்பாக்கிகள் உள்ளன. ராணுவ வீரர்கள் 13.3 கோடி துப்பாக்கிகளையும் பொலிஸார் 2.27 கோடி துப்பாக்கிகளையும் பயன்படுத்துகின்றனர்.

சட்டபூர்வமாகவும், சட்டவிரோதமாகவும் பொதுமக்களில் அதிகமானோர் துப்பாக்கி வைத்திருக்கும் நாடுகள் வரிசையில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. அந்த நாட்டில் 39.3 கோடி மக்களிடம் துப்பாக்கி உள்ளது. அடுத்து 2ஆவது இடத்தில் இந்தியா உள்ளது. இந்தியர்களிடம் சுமார் 7.11 கோடி துப்பாக்கிகள் உள்ளன. சீனர்களிடம் 4.97 கோடி துப்பாக்கிகள், பாகிஸ்தானியர்களிடம் 4.39 கோடி துப்பாக்கிகள், ரஷ்யர்களிடம் 1.76 கோடி துப்பாக்கிகள் உள்ளன.

எந்தெந்த நாடுகளின் ராணுவத்தில் துப்பாக்கிகள் அதிகம் உள்ளன என்பது குறித்து நடத்தப்பட்ட ஆய்வில் ரஷ்யா முதலிடத்தில் உள்ளது. சீனா, வடகொரியா, உக்ரைன் ஆகியவை அடுத்தடுத்த நிலையில் உள்ளன. அமெரிக்கா 5ஆவது இடத்தில் உள்ளது.

இதேபோல எந்த நாட்டுப் பொலிஸாரிடம் அதிக துப்பாக்கிகள் உள்ளன என்பது குறித்து நடத்தப்பட்ட ஆய்வில் ரஷ்யா முதலிடத்தில் உள்ளது. சீனா, இந்தியா, எகிப்து ஆகியன அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன. அமெரிக்கா 5ஆவது இடத்தில் உள்ளது.

(உ)

---

# கஞ்சா 'பிஸ்னெஸ்' கடனாவில் அனுமதி!

உற்சாகத்திற்காக கஞ்சா பயன்படுத்துவதை அனுமதிக்கும் சட்டம் கனடா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஏற்கனவே, பல நிலைகளை கடந்து வந்திருந்த இந்தச் சட்டம் கடைசியாக கடந்த செவ்வாய்க்கிழமையன்று அந்நாட்டின் செனட் சபையில் நடந்த வாக்கெடுப்பில் 52-29 என்ற கணக்கில் வெற்றிபெற்றது.

கஞ்சாவை வளர்ப்பது, விநியோகிப்பது மற்றும் விற்பனை செய்வது வரையிலான அம்சங்கள் சார்ந்த கட்டுப்பாடுகள் மற்றும் ஒழுங்குபடுத்துதல்களை இந்த சட்டம் அளிக்கிறது.

கடந்த 2001 ஆம் ஆண்டு முதல் மருத்துவ காரணங்களுக்காக கஞ்சாவை பயன்படுத்துவது கனடாவில் சட்டரீதியாக அனுமதிக்கப்பட்டுள்ளது. 1923 ஆம் ஆண்டில் அந்நாட்டில் கஞ்சா வைத்திருப்பது குற்றச் செயலாக அறிவிக்கப்பட்டிருந்தது.

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இது குறித்து வெளியிட்ட டிவிட்டர் செய்தியில் –

"நம் குழந்தைகளுக்கு எளிதில் கஞ்சா கிடைக்கிறது. அதேபோல் சமூக குற்றவாளிகள் லாபம் சம்பாதிக்கவும் இது காரணமாக அமைகிறது" என்று தெரிவித்திருந்தார்.

"இந்த சட்டத்தின் மூலம் இதற்கு முடிவு கட்டியுள்ளோம்" என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

கனடா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இந்த



சட்டபூர்வ அங்கீகாரம் கிடைத்தது

சட்டத்துக்கு நாட்டின் அரசமைப்பு ஒப்புதல் இந்த வாரத்தில் கிடைக்க வாய்ப்புள்ளது.

பின்னர், அதிகாரபூர்வமாக ஒரு நாளை அரசு தேர்ந்தெடுக்க, அன்று முதல் இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும்.

முன்னதாக, கஞ்சா பயிரிட்டு விற்பனை செய்யவும், வாங்கிப் பயன்படுத் தவும் சட்ட பூர்வ அனுமதியளிக்கும் பிரேரணை, கனடா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டது.

மருத்துவத்துக்காக கஞ்சாவைப் பயன்படுத்த கனடாவில் அனுமதி உள்ளது. இந்நிலையில், தற்போது கஞ்சா விற்பனைக்குக் கனடாவின் நாடாளுமன்றத்திலிருந்து ஒப்புதல் கிடைத்துள்ளது.

# ராஜீவ் காந்தியின் படுகொலை சரித்திரக் கிரிமினல் குற்றம்

ராஜீவ் காந்தி படுகொலை ஒரு சரித்திரக் கிரிமினல் குற்றம். அதனால் அதனுடன் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை விடுவிக்க முடியாது.

ராஜீவ் காந்தி கொலைச் சம்பவம் தொடர்பாகத் தண்டனை விதிக்கப்பட்ட ஏழு பேரையும் விடுவிக்க முடியாது எனத் தெரிவித்து தமிழக அரசுக்குத் தாம் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றாராம் இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த்.


ஜனாதிபதி தனது உத்தரவில் என்ன கூறி இருக்கிறார்? என்ற விவரங்கள் இப்போது கிடைத்துள்ளன. அதில் ஜனாதிபதி கூறியிருப்பவை வருமாறு: –

ராஜீவ்காந்தி கொலையில் சம்பந்தப்பட்ட வெளிநாட்டினர் 4 பேர் மற்றும் இந்த கொலையில் உடந்தையாக இருந்த இந்தியர்கள் 3 பேர் என 7 பேரையும் விடுவிப்பது என்பது ஓர் ஆபத்தான முன்னுதாரணமாகிவிடும். மேலும் இது, சர்வதேச அளவிலும் பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

நாட்டின் முன்னாள் பிரதமரை கொலை செய்து ஈடு இணையற்ற தவறுகளைச் செய்திருக்கிறார்கள். சரித்திர கிரிமினல் குற்றத்தை இந்த நாட்டில் செய்திருக்கிறார்கள். அவர்களுடையசெயல்பாடுகள் மிகவும் ஒழுக்கக்கேடானவையாகும்.

வெளிநாட்டை சேர்ந்த பயங்கரவாத அமைப்பு மிகவும் திட்டமிட்டு ஒருங்கிணைத்து கொடூரமான இந்த செயலில் ஈடுபட்டுள்ளது. அதில், 9 பொலிஸ் அதிகாரிகள் உள்பட 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

நாட்டின் ஜனநாயகத்தையே சீர் குலைத்து முடக்கி உள்ளனர்.



இந்திய ஜனாதிபதி தெரிவிப்பு

இந்த கொலையாளிகளுக்கு விசாரணை நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது. பெண் மனித வெடிகுண்டை பயன்படுத்தி கொடூர சதித்திட்டத்தின் மூலம் ஏராளமானோருடைய உயிரை பறித்து இருக்கிறார்கள் என்பதால் இந்த தண்டனை வழங்கப்பட்டு இருக்கிறது.

இதை விசாரித்த உச்ச நீதிமன்றின் 3 பேர் கொண்ட ஆயம் இதில் உள்ள சதி திட்டங்களை உறுதி செய்து அவர்கள் மோசமான குற்றம் செய்தமையை சுட்டிக்காட்டி அரிதிலும் அரிதான வழக்கு என்று கூறி இருக்கிறது.




விடுதலைப்புலிகள் மற்றும் அவர்களது ஆதரவாளர்கள் மூலம் இந்தக் கொலை திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்திய ஜனநாயகத்துக்கு ஆபத்தை ஏற்படுத்தி இருக்கிறார்கள். எனவே, அவர்களை விடுவிக்க முடியாது.

– இவ்வாறு ஜனாதிபதி தனது உத்தரவில் கூறி இருக்கிறார்.

# காஷ்மீரில் ஆளுநர் ஆட்சி!

## பா.ஜ.க. – ஜனநாயகக் கட்சி கூட்டு முறிவு

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் மாநிலக் கூட்டாட்சி முறிந்தமையை அடுத்து அங்கு ஆளுநர் ஆட்சி நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

ஆளுநரின் பரிந்துரையை ஏற்று, குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் அளித்த ஒப்புதலின்பேரில் காஷ்மீரில் ஆளுநர் ஆட்சி அமுல் படுத்தப்பட்டது.

பா.ஜ.க.வுடன்கூட்டணி முறிவடைந்தமையால் மக்கள் ஜனநாயகக் கட்சியின் முதலமைச்சரான மெகபூபா நேற்றுமுன்தினம் தமது பதவியை ராஜினாமா செய்தமையை அடுத்து, நேற்று காஷ்மீரில் ஆளுநர் ஆட்சி அமுல்படுத்தப்பட்டது.

87 உறுப்பினர்கள் கொண்ட ஜம்மு காஷ்மீர் சட்டசபைக்கு 2014 ஆம் ஆண்டு இறுதியில் சட்டசபைத் தேர்தல் நடைபெற்றது. தேர்தலின் போது ஏற்கனவே ஆட்சி செய்த காங்கிரஸ் தேசியமாநாட்டு காங்கிரஸ் கூட்டணி பிரிந்து, அக்கட்சிகள் தனித்தனியாக போட்டியிட்டன. தேர்தல் முடிவில் தொங்கு சட்டசபை அமைந்தது. 28 தொகுதிகளை பிடித்து மக்கள் ஜனநாயகக் கட்சி முதலிடம் பிடித்தது. ஆட்சியமைக்க போதிய பலமான 44 உறுப்பினர்கள் எந்த கட்சிக்கும் கிடைக்கவில்லை. மோடி அலை மற்றும் அப்போதைய ஆளும் கட்சிக்கு எதிரான எதிர்ப்பு ஆகியவைகாரணமாகஜம்மு பிராந்தியத்தில் பா.ஜனதா அமோக வெற்றியைத் தனதாக்கியது.

ஆனால் பாகிஸ்தான் பயங்கரவாதம், உள்ளூர் பயங்கரவாதம், இளைஞர்கள் பயங்கரவாத இயக்கத்தில் சேர்தல், பிரிவினைவாதிகள் தூண்டிவிடுதல், பாதுகாப்பு படைகளுக்கு எதிரான கல் வீச்சு சம்பவங்கள் மற்றும் பிற வன்முறை சம்பவங்களால் அங்கு நிலை நாளுக்கு நாள் மோசம் அடைந்தது. இதனால் பாதுகாப்பு படைகள் காஷ்மீரில் பயங்கரவாதிகளை வேட்டையாடும் பணியை தொடர்ந்தன. இந்நிலையில்ரமழான்போர்நிறுத்தம்கொண்டு வரப்பட்டது.

ஜம்மு காஷ்மீரில் ரமழான் மாதத்தையொட்டி பாதுகாப்பு படைகளின் ராணுவ நடவடிக்கைகளை நிறுத்துமாறு மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டது. இருப்பினும் பொதுமக்களை இலக்காக வைத்து பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினால் பதிலடி கொடுக்கப்படும் என அங்கு குறிப்பிடப்பட்டது. ஆனால் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டாலும் பயங்கரவாதிகள் தரப்பில் துப்பாக்கி சூடு மற்றும் கையெறி குண்டு வீச்சு தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இவ்விவகாரத்தில் மக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் பா.ஜனதா இடையே கருத்து மோதல் ஏற்பட்டதாக கூறப்பட்டது. இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் ஒருமைப்பாட்டின் நன்மையை மனதில் கொண்டு, மாநிலத்தில் இப்போது எழுந்துள்ள நிலையை கட்டுக்குள்கொண்டுவர ஆட்சியை ஆளுநர் கையில் ஒப்படைக்க முடிவெடுத்துள்ளோம் என மத்திய அரசு அறிவித்தது. இதன் மூலம் அரசுக்கு அளித்து வந்த ஆதரவைவாபஸ்பெறுவதாகபா.ஜ.க அறிவித்தது.

பா.ஜ.க. ஆதரவை வாபஸ் பெற்றதுமே மெகபூபா முப்தி முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்கிறார்கள் என நேற்றுமுன்தினம் கடிதம் கொடுத்தார். இதனையடுத்து மாநிலத்தில் நேற்று ஆளுநர் ஆட்சி அமைக்கப்பட்டுள்ளது. ஆளுநரின் பரிந்துரையை ஏற்று, குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் இதற்கான ஒப்புதலை அளித்துள்ளார்.

# தினகரனின் தேர்தல் வெற்றி; உறுதிப்படுத்தியது நீதிமன்றம்

தமிழ் நாட்டில் ஆர்.கே. நகர் தொகுதி இடைத்தேர்தலில் சுயேச்சையாகக் குக்கர் சின்னத்தில் போட்டியிட்ட டி.டி.வி. தினகரன் பெற்ற வெற்றி செல்லும் என சென்னை உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு வழங்கியுள்ளது.

ஆர்.கே.நகர் இடைத்தேர்தல் கடந்த டிசம்பர் 21ஆம் திகதி நடந்தது. இதில் சுயேச்சையாகக் குக்கர்சின்னத்தில்போட்டியிட்ட டி.டி.வி. தினகரன் 89 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இந்த வெற்றியை எதிர்த்து தேசிய மக்கள் சக்தி கட்சியை சேர்ந்தவரும், ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் போட்டியிட்டவருமான எம்.எல். ரவி சென்னை உயர் நீதிமன்றத்தால் வழக்கு தொடர்ந்தார்.

அதில், டி.டி.வி.தினகரன் இடைத் தேர்தலில் முறைகேடுகள் செய்து அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுஉள்ளார். ஆர்.கே. நகர் தொகுதிக்கு 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டு பெரும் அளவில் பண விநியோக முறைப்பாடு காரணமாக தேர்தல் ரத்து செய்யப்பட்டது. பண விநியோகம் மற்றும் முறைகேடு தொடர்பாக டி.டி.வி.தினகரன் மீது முறைப்பாடுகள் எழுந்தன. ஆனால் இதுவரை அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும் டி.டி.வி. தினகரன் மீண்டும் போட்டியிட அனுமதிக்கப்பட்டு வெற்றி பெற்றுள்ளார். எனவே அவரது வெற்றியையும் செல்லாது என்று அறிவிக்க வேண்டும். – என்று தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணை நடைபெற்று வந்த நிலையில், ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் தினகரன் வெற்றி பெற்றமை செல்லும் என சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

(உ)

# தமது 'மக்கள் நீதி மய்யம் கட்சி'யை பதியும் பணியில் டில்லியில் கமல்

நடிகர் கமல்ஹாசன் தனது கட்சியை தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக நேற்று புதுடில்லி புறப்பட்டுச் சென்றார்.

மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல் ஹாசன் தனது புதிய கட்சிக்கான அங்கீகாரத்தை தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்வதற்காக டெல்லி சென்றுள்ளார்.

அவர் கடந்த பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி மக்கள் நீதி மய்யம் கட்சியைத் தொடங்கினார். மதுரையில் நடந்த பொதுக்கூட்டத்தில் கட்சியின் பெயர், கொடி ஆகியவற்றை அறிவித்தார்.

இந்நிலையில் கமல்ஹாசன், தனது கட்சியை முறைப்படி பதிவு செய்ய, டெல்லியில் உள்ள தலைமை தேர்தல் ஆணையத்தில் விண்ணப்பித்திருந்தார். அதன்படி, கமல் ஹாசனின் புதுக்கட்சி குறித்து ஆட்சேபம்



தெரிவிக்க தேர்தல் ஆணையம் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டது. ஆனால் இது குறித்து எந்தவித ஆட் சேபமும் தெரிவிக்கப்படவில்லை. இதனையடுத்து தேர்தல் ஆணையம் அழைப்பு விடுத்ததை அடுத்து, மக்கள் நீதி மய்யம் கட்சி நேற்று முறையாக பதிவு செய்யப்பட்டது.

இதனால் மக்கள்நீதி மய்யம் கட்சிதலைவர் கமல்ஹாசன், தேர்தல் ஆணையத்தில் தனது கட்சியை முறையாக பதிவு செய்யும் பொருட்டு கட்சி நிர்வாகிகளுடன் தேர்தல் ஆணைய அதிகாரிகளை நேற்று சந்திக்கவிருந்தார். இதற்காக, கமல்ஹாசன் மற்றும் கட்சி நிர்வாகிகள் டெல்லி சென்றுள்ளனர். நேற்றுக் காலை 11 மணியளவில், அவர்கள் தேர்தல் ஆணைய அதிகாரிகளை சந்திக்கவிருந்தார்.

**கெஜ்ரிவாலுடன் சந்திப்பு**

டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலையும் கமல்ஹாசன் நேற்றுச் சந்திக்க விருந்தார். இந்த சந்திப்பு ஒரு மரியாதை நிமித்த சந்திப்பு என்று மக்கள் நீதி மய்யம் கட்சியின் நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக அரவிந்த் கெஜ்ரிவால் கடந்த ஒன்பது நாள்களாக டெல்லி துணை நிலை ஆளுநர் அலுவலகத்தில் நடத்திவந்த தர்ணா போராட்டத்தை நேற்றுமுன்தினத்துடன் நிறுத்தி கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 5 தமிழக இளைஞர்கள் கர்நாடக விபத்தில் சாவு

பெங்களூர், ஜூன் 21

கர்நாடகாவில் சரக்கு லொறியும் காரும் மோதிக் கொண்டதில் 5 தமிழக இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

கர்நாடகாவில் சித்ரதுர்கா நகரருகே ஜவஹனள்ளி பகுதியில் சாலையில் கார் ஒன்று சென்று கொண்டிருந்தது. இந்த நிலையில், பொருள்களை ஏற்றி வந்த ஒன்று காரின் மீது வேகமுடன் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் காரில் பயணம் செய்த ஆம்பூரை சேர்ந்த 5 தமிழக இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

## பிள்ளைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மனம் இரங்கி ஆனந்த சுதாகரை விடுவியுங்கள் என்று அரசிடம் உருக்கமான வேண்டுகோளை விடுத்துள்ளார் அவரது தாயார்.

நவோதயா மக்கள் முன்னணியால் கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

நான் தற்போது மகனின் விடுதலைக்காகக் கொழும்பிலேயே தங்கியுள்ளதால், பேரப்பிள்ளைகளை என்னாலும் கவனித்துக் கொள்ள முடியாத இக்கட்டான நிலையில் உள்ளேன். அவ்வப்போது சென்று பார்த்து வர மாத்திரமே என்னால் முடியும். அவர்களின் தந்தையால் மாத்திரமே பிள்ளைகளை நன்கு பராமரிக்க முடியும். – என்றார்.

ஆனந்த சுதாகர் குற்றப்பத்திரத்தில் கைச்சாத்திட்டுள்ளமை தொடர்பில் இதன்போது அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதலளித்த அவர், 'எனது மகன் தனது சுய விருப்பத்தின் பேரில் அதில் கைச்சாத்திடவில்லை. அவரிடம் பலவந்தமாகக் கையெழுத்து பெறப்பட்டுள்ளது. அவர் இதன்போது கொடூரமாகத் தாக்கப்பட்டுள்ளார். அவரின் நகங்கள் பிடுங்கப்பட்டுள்ளன. கால்கள் முறிக்கப்பட்டுள்ளன. கழுத்துப்பகுதியில் காயங்கள் ஏற்படுத்தப்படுத்தப்பட்டுள்ளன. பத்திரத்தில் கைச்சாத்திட்டால் தன்னை விடுவிப்பதாக அதிகாரிகள் தெரிவித்ததன் பேரிலேயே எனது மகன் அதில் கைச்சாத்திட்டார். – என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, தாயின் இழப்பினாலும், தந்தையின் சிறைவாசத்தினாலும் அநாதரவாக்கப்பட்டுள்ள ஆனந்தசுதாகரின் குழந்தைகளுக்குக் கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் நவோதயா மக்கள் முன்னணி கை கொடுத்துள்ளது.

அயலவர்கள் மற்றும் உறவினர்களின் உதவியுடன் தங்கள் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்துவரும் இந்தப் பிள்ளைகளுக்கான முழுக் கல்விச் செலவையும் நவோதயா மக்கள் முன்னணி நேற்று முதல் ஏற்றுக் கொண்டுள்ளது. (ஐ)

## 3 பிள்ளைகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதன்போது இரண்டாவது மகனான 6 வயதுச் சிறுவன் தனது அம்மம்மாவைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அம்மா சோடாவுடன் ஏதோ கலந்து தந்துவிட்டார் எனக் கூறியுள்ளான்.

இதனையடுத்து அங்கு சென்ற உறவினர்கள் நால்வரையும் மீட்டுச் செட்டிகுளம் வைத்தியசாலையில் அனுமதித்தனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக அவர்கள் வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

40 வயதான தாய், 12 வயது, 6 வயது, 1 1/2 வயது பிள்ளைகள் மூவரும் ஆபத்தான நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளைச் செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-100)

## அமெரிக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எவ்வாறாயினும், மனித உரிமைகள் விவகாரம் தொடர்பில் சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளிலிருந்து இலங்கை அரசு ஒருபோதும் விலகப் போவதில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இருந்து அமெரிக்கா வெளியேறியுள்ளமை இலங்கைக்கு நன்மையை ஏற்படுத்தியுள்ளது என்றும் கூறலாம். ஏனெனில், சர்வதேச மட்டத்திலிருந்து இலங்கைக்கு விடுக்கப்பட்ட பாரிய அழுத்தமொன்று குறைவடையும். இலங்கைக்கு எதிராக ஐ.நா.வில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்துக்கு அமெரிக்கா முதலில் எதிர்ப்பை வெளியிட்டது. எனினும், கடந்த காலங்களில் இலங்கை ஐ.நா.வில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதையடுத்து, இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்காவே கொண்டு வந்தது.

இந்நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவிலிருந்து அமெரிக்கா வெளியேறியுள்ளது. அமெரிக்கா வெளியேறினாலும், நாம் சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளிலிருந்து ஒருபோதும் பின்வாங்கியோ விலகியோ செயற்படப்போவதில்லை என்பதையும் நாம் இவ்வேளையில் உறுதியாகக் கூறிக்கொள்ள விரும்புகிறோம். – என்றார். (ஐ)

## ஊரெழுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செய்துள்ளார் என்று ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரியவருவதாகப் பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

ஊரெழு கிழக்கைச் சேர்ந்த குணரட்ணம் விஜிதா (வயது – 36) என்ற பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

கணவனைப் பிரிந்து வாழும் இந்தப் பெண், கொட்டாஞ்சேனையிலுள்ள வீடொன்றில் பணிப் பெண்ணாக உள்ளார். வேலை செய்யும் வீட்டிலேயே அவர் நேற்று முன்தினம் கொலை செய்யப்பட்டுள்ளார். கழுத்தில் கத்தியால் வெட்டப்பட்டே அவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற ஒருவரோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களோ இந்தக் கொலையைச் செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் மற்றும் கொட்டாஞ்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிய கேள்விகளுக்குப் பதில் வழங்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வெளிநாடுகளில் உள்ள சில தூதுரகங்களுக்கு இதுவரை தூதவர்கள் நியமிக்கப்படவில்லை. சர்வதேச உறவுக்கு ஏற்பட்ட பின்னடைவாகவே இதனைப் பார்க்க வேண்டும். தெளிவான வெளிநாட்டுக் கொள்கை இல்லாத காரணத்தால் நாட்டின் மீதான சர்வதேச நம்பிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது. – என்றார். (ஐ)

## ஞானசாரருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக் கொழும்பில் இடம்பெற்றபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதற்கு முன்னரும் பௌத்த தேரர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்து தண்டனைகள் வழங்கப்பட்டிருப்பதாகக் கூறிய அமைச்சர், சட்டத்தின் ஊடாக வழங்கப்படும் தீர்ப்பு குறித்து எதுவும் கூற முடியாது என்றும் தெரிவித்தார்.

தற்போது கூடச் சிறைத் தண்டனை பெற்றுள்ள 15 பௌத்த தேரர்கள் மற்றும் 03 இந்து மதத் தலைவர்கள் சிறையில் உள்ளனர் எனக் கூறிய அமைச்சர், பாரிய குற்றங்கள் இழைத்துத் தண்டனை பெற்றுள்ள பௌத்த தேரர்களும் அதில் உள்ளடங்குவர் என்றும் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் ஞானசார தேரருக்கு வழங்கப்பட்டுள்ள சிறைத் தண்டனையைச் சிலர் அரசியலாக்க முயற்சிப்பதாகவும், நாளை ஞானசார தேரருக்குப் பொது மன்னிப்பு வழங்கினால் ஏனைய பௌத்த தேரர்களும் அவ்வாறு கோரிக்கை விடுக்கும் நிலைமை ஏற்படும் என்றும் அமைச்சர் ராஜித மேலும் கூறினார். (ஐ)

## விக்கியே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரட்னம் தெரிவித்தார்.

புதிதாக அமைக்கப்பட்ட மண்டைதீவு – அல்லைப்பிட்டி இணைப்புப் பாலம் நேற்று முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தீவுப் பகுதிகளின் பல இடங்களிலும் பல்வேறுபட்ட பிரச்சினைகளும் தேவைகளும் காணப்படுகின்றன. இவை குறித்து மக்கள் எம்மிடம் முன்வைத்த கோரிக்கைகளுக்கமைய எம்மாலான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

அந்த வகையில் மாகாண சபையால் பலவற்றைச் செய்து வருகின்றோம். இதற்கமையவே மண்டைதீவு–அல்லைப்பிட்டி பாலமும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த வீதியையும் திருத்தித் தருமாறு மக்கள் எம்மிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றனர். அதனையும் புனரமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

ஆயினும் இந்த வீதி புனரமைப்பதற்குள் மாகாண சபையின் காலமும் முடிவடைந்துவிடும். ஏனெனில் எமக்கு இன்னமும் மூன்றரை மாதங்களே இருக்கின்றன.

ஆனால் இன்று மாகாண சபையினால் அமைக்கப்பட்ட பாலத்தை முதலமைச்சராகக் கலந்து கொண்டிருக்கும் விக்னேஸ்வரன் திறந்து வைத்தமைபோன்று இந்த வீதியையும் அவரே முதலமைச்சராகத் திறந்து வைப்பார்.

ஏனெனில் மாகாண சபையின் அடுத்த முதலமைச்சராகவும் விக்னேஸ்வரனே வருவார். – என்றார். (ஐ-7)

## சரணடைந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தினர் சரணடைந்து காணாமற் ஆக்கப்பட்டோரின் பெயர்ப் பட்டியலைச் சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டம் அண்மையில் வெளியிட்டது.

அந்தப் பட்டியலை முறியடிக்கும் செயற்பாடுகளில் இலங்கை வெளிவிவகார அமைச்சு இறங்கியுள்ளது.

இதனடிப்படையில் காணாமற்போனோர் அலுவலகத்தின் ஊடாக விவரங்களைச் சேகரிக்கும் பணியில் வெளிவிவகார அமைச்சு களமிறங்கியுள்ளது.

இது தொடர்பாகக் காணாமற்போனோர் அலுவலகத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டத்தினால் இணையத்தில் வெளியிடப்பட்டிருந்த பெயர்களடங்கிய பட்டியல் ஒன்று வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கவனத்தை ஈர்த்துள்ளது.

சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டத்திற்கு அமைவாக, தற்பொழுது 351 பெயர்களைக் கொண்டுள்ளதும், http://www.disappearance.itjpsl.com/lang=tamil இன் வாயிலாக அணுகிக்கொள்ளக்கூடியதுமான இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ள பெயர்கள் 2009 மே மாதத்தில் இலங்கை இராணுவத்தினரின் காவலில் இருந்தபோது காணாமல் ஆக்கப்பட்டதாகக் கூறப்படும் நபர்களினுடையதாகும்.

நாடாளுமன்றச் சட்டம் ஒன்றினால் (2017ஆம் ஆண்டின் 9ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016ஆம் ஆண்டின் 14ஆம் இலக்கச் சட்டம்) தாபிக்கப்பட்டுள்ள காணாமற்போனோருக்கான அலுவலகமானது, ஏனையவற்றுக்கு மத்தியில், காணாமற்போன நபர்களைத் தேடுதல் மற்றும் கண்டறிதல் மற்றும் குறித்த நபர்கள் எந்தச் சந்தர்ப்பத்தில் காணாமல் ஆக்கப்பட்டார்கள் என்பதைத் தெளிவுபடுத்துதல், மற்றும் அவர்களது தலைவிதி, காணாமற்போன நபர்களின் சம்பவங்களைக் குறைப்பதன் ஊடாகச் சம்பந்தப்பட்ட அதிகார சபைகளுக்குப் பரிந்துரைகளை மேற்கொள்ளுதல், காணாமற்போன நபர்கள் மற்றும் அவர்களது உறவினர்களின் நலன்களைப் பாதுகாத்தல் மற்றும் காணாமற்போன நபர்கள் அல்லது அவர்களது உறவினர்களுக்கு வழங்கப்படக்கூடிய முறையான நிவாரணங்களை அடையாளங்காணுதல் போன்ற செயற்பாடுகளுக்கான அதிகாரமுடைய இலங்கையிலுள்ள நிரந்தரமானதும், சுதந்திரமானதுமான அமைப்பு ஆகும்.

ஆகையால், பின்வருவன தொடர்பிலான தகவல்களை இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள எவரேனும் அறிந்திருந்தால் காணாமற்போனோருக்கான அலுவலகத்துடன் பகிர்ந்து கொள்ளுமாறு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு வலியுறுத்தி ஊக்குவிக்கின்றது.

சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டத்தால் வெளியிடப்பட்டுள்ள பட்டியலிலுள்ள நபர்கள் தொடர்பான ஏதேனும் ஏனைய/ மேலதிக விரிவான தகவல்கள் மற்றும் அவர்கள் எவ்வாறான சந்தர்ப்பத்தில் காணாமலாக்கப்பட்டார்கள் – எவரிடமும்/எந்த அமைப்பிடமும் காணப்படும், இந்தச் சட்டத்தின் 27ஆம் பிரிவினால் விவரிக்கப்பட்டுள்ள வகையில் காணாமற்போயுள்ளவர்களாகக் கருதப்படத்தக்க பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸார் உள்ளடங்கலான ஏதேனும் நபர்களின் வேறு ஏதேனும் பட்டியல்கள் / தகவல்கள் காணப்படின், அவற்றைப் பின்வரும் வகையில் தெரியப்படுத்தவும்.– என்றுள்ளது.

தலைவர்,
காணாமல் போனோருக்கான அலுவலகம்,
முகவரி: 34, நாராஹேன்பிட வீதி, நாவல, இலங்கை
மின்னஞ்சல்: ompsrilanka@gmail.com. (ஐ)

## வடமாகாணப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செயலகம் முன்பாகத் தொழில் உரிமை கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நாடு முழுவதுமுள்ள வேலையற்ற பட்டாரிகளில் 5000 பேருக்கு அடுத்த மாதமும் மேலும் 15 ஆயிரம் பேருக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதமும் அபிவிருத்தி உதவியாளர் நியமனம் வழங்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது.

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற நேர்முகத் தேர்வின் அடிப்படையிலேயே இந்த நியமனம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் 15 ஆயிரம் பேரை நியமிப்பதற்கு மீளவும் நேர்முகத் தேர்வு நடத்தத் திட்டமிடப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் முன்பாக நேற்றுக் காலை ஒன்றுகூடிக் கலந்துரையாடினர்.

அதனைத் தொடர்ந்து தொழில் உரிமை கவனவீர்ப்புப் போராட்டத்தையும் அவர்கள் முன்னெடுத்தனர். (ஐ-7)

## 6 மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
"மாகாணசபைத் தேர்தலை நடத்த முன்னர், எல்லை நிர்ணய அறிக்கை, விவாதிக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் ஒப்புதல்பெறப்படவேண்டும். பழைய முறையிலேயே மாகாணசபைத் தேர்தலை நடத்த நாம் இணங்கியுள்ளோம் என ஊடகங்களில் வெளியான செய்திகள் தவறு.

"நானோ அல்லது, ஜனாதிபதியோ, பழைய முறையில் தேர்தலை நடத்த இணங்கவில்லை. மக்களுக்கு அளித்த வாக்குறுதிப்படி, புதிய முறையில் தேர்தலை நடத்த நாம் கடமைப்பட்டுள்ளோம்.

"பழைய முறையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதென்றால் கூட அதற்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெற வேண்டும்" என்று அமைச்சர் பைசர் முஸ்தபா கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே அமைச்சர் ராஜித நேற்று இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

"விருப்பு வாக்குகள் முறைமையில் (விகிதாசார) எதிர்வரும் டிசெம்பர் மாதம் வடக்கு – கிழக்கு உட்பட 6 மாகாண சபைகளுக்குத் தேர்தல் நடத்தப்படும். இதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது" என்று அமைச்சர் ராஜித நேற்றுக் கூறினார். (ஐ)



# ஜப்பான் வரலாற்று வெற்றி

உலகக்கிண்ண உதைபந்துத் தொடரில் லீக் ஆட்டத்தில் ஆசியாவின் ஜப்பான் அணி 2 - 1 எனும் கோல் கணக்கில் தென்னமெரிக்க நாடான கொலம்பியா அணியை வீழ்த்தியது.

‘எச்’ பிரிவில் இடம்பெற்றுள்ள ஜப்பான் மற்றும் கொலம்பியா அணிகள் மோதிக்கொண்ட போட்டி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்தப்போட்டி ஆரம்பித்து 6ஆவது நிமிடத்தில் ஜப்பான் வீரர் ஷின்ஜி கஹாவா முதல் கோலினைப் பதிவு செய்தார் அதனைத் தொடர்ந்து போட்டியின் 39 ஆவது நிமிடத்தில் கொலம்பியாவின் யுவன் பெர்னாண்டோ தமது அணிக்காக ஒரு கோலினைப் போடா முதல்பாதிநேர ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது பாதிநேர ஆட்டத்தின் 73 ஆவது நிமிடத்தில் ஜப்பான் வீரர் யூயா ஒசாகோ ஜப்பான் தமது அணிக்காக இரண்டாவது கோலிலைப் பதிவு செய்ய ஜப்பான் அணி 2 -1 என முன்னிலை பெற்று இறுதியில் வெற்றிபெற்றது.

கொலம்பிய வீரரான கார்லோஸ் சன்சி போட்டியின் 3ஆவது நிமிடத்திலேயே சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார் இவரே இவ்வருட உலகக்கிண்ணத் தொடரில் சிவப்பு அட்டை மூலம் வெளியேற்றப்பட்ட முதல் வீரர் ஆவார்.

இந்தப் போட்டியில் பெற்ற வெற்றியின் மூலம் ஜப்பான், கால்பந்தாட்ட உலகக்கிண்ண போட்டி வரலாற்றில் முதன் முறையாக ஆசிய நாடு ஒன்று தென்ன மெரிக்க நாட்டினை வெற்றி பெற்றுள்ள பெருமையினை தன்வசப் படுத்தி யுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# போலந்துக்கு செனகல் அதிர்ச்சி வைத்தியம்

உலகக்கிண்ண உதைபந்துத் தொடரில் பெரிதும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் அரங்கேறிய போலந்து மற்றும் செனகல் அணிகளுக்கிடையிலானபோட்டியில், போலந்து அணியை 21 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி செனகல் அணி வெற்றி பெற்றது.

நடப்பு உலகக்கிண்ண உதைபந்துத் தொடரில், ஆபிரிக்க அணியொன்று பெற்றுக்கொண்ட முதல் வெற்றியாக இந்த வெற்றி பதிவு செய்யப்பட்டது. 16 வருடங்களுக்கு பிறகு உலக்கிண்ண உதைபந்துத் தொடருக்குள் நுழைந்துள்ள செனகல் அணி, முதல் வெற்றியை பெற்றிருப்பது அந்நாட்டு இரசிகர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை கொடுத்துள்ளது.

மொஸ்கோ, ஸ்பார்ட்னக்விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம்நடைபெற்ற இப்போட்டியில், இரு அணி வீரர்களும் சிறப்பாக விளையாடினர். முதல் பாதியில் 37ஆவது நிமிடத்தில் செனகல் வீரர் இத்ரிஸ்ஸா குயே உதைத்த பந்து, போலந்து அணியின் தடுப்பாளரான தியாகோசியோநெக்கின் பாதத்தில் பட்டு சேம் சைட் கோலாக மாறியது.



இந்தக்கோல்செனகல் அணியின் இரசிகர்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தினாலும், அவர்களின் வெற்றிக் கொண்டாட்டங்கள் போலந்து அணியின் வீரர்களையும், இரசிகர்களையும் கடும் அதிர்ச்சியிலேயே உறைய வைத்திருந்தன. இதே போக்கோடு முதல் பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

இடைவேளையின் பின்னர் இரண்டாவது பாதி நேரத்தில், இரண்டு அணி வீரர்களும் ஆக்ரோஷத்துடன் விளையாட ஆரம்பித்தனர். இதன்போது இரு அணிகளுக்கும் கோல் அடிக்க பல வாய்ப்புகள் கிடைத்தும் அது வீணடிக்கப்பட்டது. போலந்து மூன்று வாய்ப்புகளையும் செனகல் ஒரு வாய்ப்பையும் முறையாகப் பயன்படுத்தத் தவறின.

போட்டியின் 60ஆவது நிமிடத்தில் எம் பாயே நியாங், பந்தை கோல் கம்பத்துக்கு அருகில் கடத்திச் சென்று புகுத்திய கோல் இரசிகர்களுக்கு அதிர்ச்சியை கொடுத்திருந்தாலும், போலந்து வீரர்கள் இந்தக் கோலுக்கு அதிருப்தி வெளியிட்டனர்.

உபாதைக்குள்ளாகி சிகிச்சை பெற்ற பின்னர் ஆடுகள எல்லைக்கு வெளியே நின்ற எம் பாயே நியாங், மத்திய களத்திலிருந்து பரிமாறப்பட்ட பந்தை நோக்கித் திடீரென உள்ளே நுழைந்து ஓடி, போலந்து கோல்காப்பாளர் வோஜ்சியெச் ஸெஸ்னியையும் பின்கள வீரர் ஜேன் பெட்நாரெக்கையும் கடந்து சென்று வெற்று கோல்வலைக்குள் பந்தைப் புகுத்தினார்.

இதற்கு போலந்து வீரர்கள் தமது ஆட்சேபத்தை வெளியிட்டபோதிலும், மத்தியஸ்தர் நவாவ் ஹூக்ரல்லா அதனைப் பொருட்படுத்தவில்லை.

அதிருப்தியுடன் தொடர்ந்து போராடிய போலந்து, போட்டியின் 86ஆவதுநிமிடத்தில்கிரிச்சோவியக் மூலம் முதல் கோல் போட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் காமில் கிரொசிக்கி பரிமாறிய பந்தை கிரிச்சோவியக் தனது தலையால் முட்டி கோலாக்கினார்.

இதன்பின் போட்டி முடியும் வரை இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. இறுதியில், செனகல் அணி போலந்து அணியை 2-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி முதல் வெற்றியை பதிவு செய்தது.

(ஐ)



# 2 ஆவது வெற்றியை பதிவு செய்த ரஷ்யா

உலகக்கிண்ண உதைபந்துத் தொடரில், எகிப்து அணியை வீழ்த்தி ரஷ்யா அணி இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

ரஷ்யாவில் விறுவிறுப்பாக நடைபெற்று வரும் உலகக்கிண்ண உதை பந்துத் தொடரில், நேற்றுமுன்தினம் எகிப்து அணியும், ரஷ்ய அணியும் பலப் பரீட்சை நடத்தின.

மூன்றாவது போட்டியாக செயின்ட் பீட்டர்ஸ்பர்க் விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டியில் சொந்த நாடான ரஷ்யா விளையாடியதால், உள்ளூர் இரசிகர்கள் மைதானத்தில் நிரம்பி வழிந்தனர்.

அத்தோடு பல விருதுகளுக்குச் சொந்தக்காரரான எகிப்து அணியின் நட்சத்திர வீரர் மொஹமட் சாலாவும் இப்போட்டியில் களமிறங்கியதால் இப்போட்டி இரசிகர்களுக்குச் சிறப்பு வாய்ந்த போட் டியாக அமைந்திருந்தது.

பல்வேறு சிறப்புகளைத் தாங்கியவாறு அரங்கேறிய இப்போட்டியின் முதல் பாதியில், இரு அணி வீரர்களும் கோல் வலைக்குள் பந்தை புகுத்த எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை. இதனால் முதல் பாதி கோல் எதுவும் இல்லாமல் முடிவுக்கு வந்தது.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது பாதி நேர ஆட்டத்தில், ரஷ்ய அணியினர் சிறப்பாக விளையாடினர். 47ஆவது நிமிடத்தில் ரஷ்ய வீரர் ரோமன் சொப்னின் அடித்த பந்தை எகிப்து அணியின் தடுப்பாளரான அகமது பதே தடுக்க முயன்ற போது பந்து எதிர்பாராதவிதமாக வலைக்குள் புகுந்தது.

இந்த ‘சேம் சைட்’ கோலால் ரஷ்ய அணி 1-0 என முன்னிலை பெற்றது. இந்த மகிழ்ச்சியை கொண்டாடிய ரஷ்ய அணியின் இரசிகர்களை மேலும் மகிழ்வூட்டும் முயற்சியில் ரஷ்ய அணி தீவிரம் காட்டியது.

அதற்கேற்றாற்போல், ரஷ்ய அணியின் வீரர்கள் குறுகிய நேரத்தில் தொடர்ச்சியாக இரண்டு கோல் அடித்து இரசிகர்களை உச்ச மகிழ்ச்சிக்கு கொண்டு சென்றனர்.

டெனிஸ் செரிதேவ் 59ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். தொடர்ந்து, ரஷ்யாவின் அர்டெம்சுபையா 62ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடிக்க ரஷ்ய அணி 3-0 என முன்னிலை வகித் தது.

ரஷ்ய அணியினரின் ஆட்டத்தால் திகைத்து நின்ற எகிப்து அணியினர் செய்வதறியாது திக்குமுக்காடினர். ஆனால் அந்த அணியின் நட்சத்திர வீரர் மொஹமட் சாலா, 73ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்து அணிக்கு ஆறுதல் அளித்தார்.

அதன்பின் இரு அணிகளின் வீரர்கள் முயற்சித்தும் போட்டி முடியும் வரை யாரும் கோல் அடிக்கவில்லை. இதனால் இறுதியில், ரஷ்ய அணி எகிப்து அணியை 3-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி வெற்றிபெற்றது.

உலகக்கிண்ண உதைபந்துத் தொடரில் ‘ஏ’ பிரிவில் இடம்பெற்றுள்ள ரஷ்யா, முதல் போட்டியில் சவூதி அரேபியாவை வீழ்த்தியது. தற்போது எகிப்து அணியையும் வீழ்த்தியதன் மூலம் அந்த அணி குழு ‘ஏ’ பிரிவில் 6 புள்ளிகளுடன் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது.

## உலகக் கிண்ண உதைபந்து

FIFA WORLD CUP RUSSIA 2018

### இன்றைய ஆட்டங்கள்

| | | |
|---|---|---|
| டென்மார்க் | 5.30 p.m | ஆஸ்திரேலியா |
| பிரான்ஸ் | 8.30 p.m | பெரு |
| ஆர்ஜென்ரீனா | 11.30 p.m | குறோசியா |

காலைக்கதிர் Kalaikkathir



# ஜெனீவாத் தீர்மானம்; நிலைப்பாடு என்ன?

## அரசிடம் கேட்கிறார் நாமல்



கொழும்பு, ஜூன் 21

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் கடந்த 2015ஆம் ஆண்டு அமெரிக்காவின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட இலங்கைத் தொடர்பிலான தீர்மானம் குறித்த அரசின் நிலைப்பாடு என்ன என்று கேள்வி எழுப்பியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இருந்து உத்தியோகபூர்வமாக வெளியேறுவதாக அமெரிக்கா அறிவித்துள்ள நிலையில், நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டர் தளத்தில் நேற்று இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அல்லது நிதி அமைச்சர் மங்கள சமரவீரஆகியோரிடம் இருந்து பதிலைத் தான் எதிர்ப்பார்த்துள்ளார் எனவும் அவர் தனது டுவிட்டர் பதிவில் கூறியுள்ளார். (ஐ)

# மல்லாகம் துப்பாக்கிச் சூடு; மேலும் இரண்டு பேர் கைது

மல்லாகத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பாக பொலிஸாரால் தேடப்பட்டு வந்த 40 பேரில், இருவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார், அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ஐ)

# புத்தளத்தில் ஆர்ப்பாட்டம்

புத்தளம் பகுதியில் சீன நிறுவனமொன்றினால் நிர்மாணிக்கப்பட்டு வரும் தொழிற்சாலைக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டமொன்றை நேற்று முன்னெடுத்தனர்.

புத்தளம் – நுரைச்சோலை லக் விஜய அனல் மின் நிலையத்தில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகளைக் கொண்டு முந்தல் 412 ஏக்கர் பகுதியில் சீன நிறுவனமொன்று சிமெந்துக் கல் உற்பத்தித் தொழிற்சாலையை அமைத்து வருவதைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்கள் பல்வேறு சுலோகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தி, புத்தளம்-கொழும்பு பிரதான வீதியிலிருந்து முந்தல் நகரிலுள்ள பௌத்த விகாரைக்குப் பேரணியாகச் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

### சுவிஸ்குமாரை தப்பிக்க உதவிய வழக்கு;

# பொலிஸ் அதிகாரிகள் மீதான வழக்கின் தீர்மானம் சட்டமா அதிபரின் கைகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 21

புங்குடுதீவு மாணவி கொலை வழக்கின் முக்கிய சூத்திரதாரியான சுவிஸ் குமாரை விடுவித்து உதவியதாகப் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிரான வழக்கின் விசாரணைகள் முற்றுப் பெற்று மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்காக அறிக்கை சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் நேற்று அறிவிக்கப் பட்டது.

புங்குடுதீவு மாணவி வித்தியா சிவலோகநாதன் படுகொலை வழக்கின் முக்கிய சூத்திரதாரியாகக் கூறப்படும் சுவிஸ்குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார் என்பவரை விடுவித்து உதவினார்கள் என்ற குற்றச்சாட்டில் வடக்கு மாகாண முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் ஆகியோருக்கு எதிராகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்து பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் தலைமறைவாகி உள்ளார். அவருக்கு எதிராக நீதிமன்றால் பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஏ.ஜூட்சன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

முன்னாள் வடமாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க நேற்று மன்றில் முன்னிலையாகினார். அவர் சார்பில் சட்டத்தரணி மன்றில் தோன்றினார்.

அரச சட்டவாதி இந்த வழக்கின் விசாரணைகள் முற்றுப்பெற்று வழக்கின் கோவை தற்போது சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு எனக் கையளிக்கப்பட்டுள்ளது என அரச சட்டவாதி மன்றில் தெரிவித்தார். இதையடுத்து இந்தவழக்கை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி வரை நீதிமன்று ஒத்திவைத்தது. (ஐ)

# தேசிய பாடசாலைகளின் அதிபர்கள் 8 ஆண்டுகளே ஒரே பாடசாலையில்

கொழும்பு, ஜூன் 21

தேசியப் பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்கள் ஆகக் கூடியது 8 ஆண்டுகளே ஒரே பாடசாலையில் கடமையாற்ற முடியும் என்ற கட்டுப்பாடு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தத் தகவலைக் கல்வி அமைச்சின் கல்விச் சேவைக் குழு தெரிவித்துள்ளது.

இதுவரை காலமும் தேசியப் பாடசாலை அதிபர்கள் ஒரே பாடசாலையில் 10 ஆண்டுகள் கடமையாற்ற முடியும் என்று இருந்த கட்டுப்பாடே 8 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பரிந்துரைக்கு அமைவாகவே இந்தப் புதிய கட்டுப்பாடு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது எனக் கல்வி சேவைக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, தேசியப் பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்காகப் புதிதாக 250 பேரைச் சேவைக்குள் இணைக்கும் வர்த்தமானி அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் எனவும் கல்விச் சேவைக்குழு தெரிவித்துள்ளது. (ஐ)

# பாடசாலை மாணவியை அதிபர் தண்டித்தார் என முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 21

சாவகச்சேரி கல்வி வலயத்துக்கு உட்பட்ட கச்சாய் பகுதியில் உள்ள பாடசாலையொன்றில் மாணவியை அதிபர் அடித்துத் தண்டித்தார் எனப் பொலிஸ் அவசர பிரிவு இலக்கத்துக்கும் தென்மராட்சிக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்திலும் பெற்றோரால் முறையிடப்பட்டுள்ளது.

அந்தப் பாடசாலையில் தரம் 10 கல்வி பயிலும் மாணவி ஒருவர் நேற்று முன்தினம் மதியம் பாடசாலை முடிந்து பெற்றோருடன் மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது திடீரென மயங்கி வீதியில் விழுந்துள்ளார். இதனால் காயமடைந்த மாணவியைச் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாணவி மாற்றப்பட்டார்.

இதன்போது மாணவியைப் பரிசோதித்த வைத்தியர், உள்ளங்கையில் கண்டல் காயங்கள் இருப்பதை அவதானித்து அவரிடம் வினவியுள்ளார். இதன்போது அதிபர் ஓட்டோவின் அன்ரனாவால் அடித்தார் என மாணவி கூறியுள்ளார்.

இந்தப் பாடசாலையில் தரம் 10, 11 மாணவர்களின் பெற்றோருக்கான கூட்டம் பாடசாலையில் இடம்பெற்றுள்ளது. இந்தக் கூட்டத்துக்குப் பெற்றோரை அழைத்து வராத மாணவர்களை மைதானத்தில் வைத்துப் பாடசாலை அதிபர் தண்டித்துள்ளார். இதன்போதே ஓட்டோ அன்ரனா ஒன்றினால் அதிபர் அடித்தார் அந்த மாணவி தெரிவித்துள்ளார்.

இதனையடுத்தே மாணவியின் தந்தை இந்த விடயம் தொடர்பாக பொலிஸ் அவசர இலக்கத்துக்கு முறையிட்டுள்ளார்.

இது தொடர்பாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரிடம் வினவியபோது, பாடசாலையில் 15 வரையான மாணவர்களை அதிபர் தடி ஒன்றினால் சாதாரணமாகவே தண்டித்துள்ளார்.

அந்த அதிபர் மோசமாக நடந்து கொள்ளக்கூடியவரும் அல்லர். தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியினாலேயே இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறையிடப்பட்டிருக்கலாம் எனத் தெரிவித்துள்ளார். (ஐ)






இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.06.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.